
சம

# காலம்



உலக கிண்ணம் 2006

சிறப்புக் கட்டுரை

இதழ் 08 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JR PRINT

57 Boundary Road
Walthamstow London E17 8NQ

Letter Heads
Visiting Cards
Rubber Stamps
Wedding Cards
Tamil Banners
Cake Boxes
Shorteat Boxes
Colour Printing
Raffle Tickets
Photocopying
Translation
Competitive Prices

Compliment Slips
Souvenirs & Invoices
Invitation Cards
Signboards, Leaflets
Birthday Cards
Rich Cakes
Shorteat Bags
Arangetram Books
Laminating
Rubber Stamps
Translation Services
Fast & Reliable Services

Full Colour Printing

Call us for a Quotation

எங்கள்
இணையத்தளத்தளத்திற்கு
விஜயம் செய்யுங்கள்
எமது சேவைகளின்
விபரத்தை அறிவீர்கள்.

**Tel: 020 8503 6643**

Web: www.jrprint.com

E-mail: contact@jrprint.com

Fax: 020 8281 3879
Mob: 07956 963 470

*Visit our website and view the range of services*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லினச் சமுதாயத்தில் மகிழ்ச்சியுடன் வாழ வழி உண்டா?

பல்லினச் சமுதாயத்தில் ஏக இனச் சமுதாயத்தில் இருப்பதை விட மகிழ்ச்சி குறைவாக இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஒவ்வொருவருக்கும் இடையே நம்பிக்கை குறைவாக இருப்பதே இவ்வாறு மகிழ்ச்சி குறைவாக இருப்பதற்கான முதற்காரணி எனவும் இவர்கள் கருதுகின்றனர். பிரித்தானிய உள்ளக அலுவலகத்தின் ( Home Office) ன் ஆய்வின் படியும் பல்லின மக்கள் வாழும் பகுதிகளில் மக்களிடை நம்பிக்கையீனம் அதிகமாக இருப்பது தெரியவந்துள்ளது.



பிரித்தானிய இனச்சமத்துவ ஆணையாளர் டிரவர் பிலிப்ஸ் அவர்களும் - மக்கள் தங்களைப் போன்றவர்களுக்கு மத்தியில் இருக்கும் பொழுது மகிழ்ச்சியானவர்களாக இருக்கின்றனர் என்பதை ஏற்றுக்கொள்கிறார். ஆனால் தங்களைப் போல் என்கிற உணர்வை எது ஏற்டபடுத்துகிறது என்பதே கேள்விக்குரிய விடயம்.. பொதுவான தேவைகளை வளர்ச்சிகளை வளப்படுத்தும் எண்ணங்கள் பங்களிப்புகளே இந்த தங்களைப் போன்றவர்களென்ற எண்ணத்தின் அத்தளமாக உள்ளது. இனத்துவத்துக்கு அப்பால் பொதுவான தேவைகளில் இணைகின்ற பொழுதே இந்த உணர்வேற்படும் என்பதே டிரவர் பிலிப்ஸின் கருத்தாக உள்ளது.

"சமுகங்கள் சமுக ஒப்பந்தத்தில் இணைந்து வாழந்தாலும் சமுக முதலீட்டில் பாலங்களை ஏற்படுத்தாத நிலையில் வாழும் பொழுது அங்கு இறுக்கமான சமுதாய அமைப்புக்கள் தோன்றி ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்துடன் இணையாது ஒருவரில் இருந்து மற்றவர் தனித்து வாழும் நிலை ஏற்படுகிறது. பெய்ரூட் - பெல்பாஸ்ட் - பொஸ்னியா எனப்பல சமுதாயங்கள் இதற்கு உதாரணங்களாகின்றன." இவ்வாறு ஹார்வேர்ட் பல்கலைகழக போசிரியர் றெபேர்ட் பட்னம் தனது "தனியே பவ்லிங் விளையாடுதல் - அமெரிக்க சமுதாயங்களின் மோதல்களும் மறுசீரமைப்பும்" என்னும் நூலில் குறிப்பிடுகிறார். இதன் அடிப்படையில் சமுதாய முதலீட்டில் பாலத்தை ஏற்படுத்த சமுதாயங்களை எவ்வாறு கட்டி எழுப்புதல் என்பதே இன்றைய மேற்குலகில் சமுதாயங்களின் ஒன்றிப்புக்கானப் பிரதான கட்டுமானமாகக் கருதப்படுகிறது. எனவே தங்களில் இருந்து வேறுபட்டவர்களுடன் மக்கள் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான புதிய சந்தர்ப்பங்களை உருவாக்குதல் என்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டாலே சமுதாய மகிழ்ச்சி மலரும். பிரித்தானியாவில் பெர்மிங்ஹார்மில் லொசிலஸ் பகுதியில் 2005 கோடை விடுமறை காலத்தில் இறுக்கமான முறையில் வாழ்ந்த கறுப்பு இன மக்களுக்கும் இறுக்கமான முறையில் வாழ்ந்த ஆசிய இன மக்களுக்குமிடையில் முரண்பாடுகள் தோன்றியமைக்கு இனத்துவ உணர்வு மிகுந்து இனத்தொடர்புகள் இல்லாத நிலை இவ்விரு சமுதாயங்களிடை நிலவியமையே காரணம் என்பது பிரித்தானிய இனச்சமத்துவ ஆணையாளர் டிரவர் பிலிப்ஸ்ஸின் கருத்து. சமுதாய முதலீடு பணப்பொருளாதாரமாக மட்டுமல்லாது உயர் விழுமியங்களை ஆற்றல்களை திறமைகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலமும் செய்யப்படலாம். பல்லின மக்களின் கூட்டு உதைபந்தாட்டக் குழுக்கள் பாடகர் குழுக்கள் நாடகக் குழுக்கள் போன்ற பலவிதங்களில் சமுக விழுமியங்கள் பகிர்ந்து கொள்ளப்படலாம் என்பதே பலரின் கருத்தாக உள்ளது. இருந்தபோதிலும் சமுக முதலீட்டுப் பாலத்தைப் பணப்பொருளாதாரத்தினுடாக வர்த்தகங்கள் சேவைகள் தொழில்முயற்சிகள் ஊடாக ஒரு சமுதாயம் மேற்கொள்ளும் பொழுதே பேராசிரியர் றெபேர்ட் பட்னம் கூறுவது போல சமுதாயங்கள் குறித்த சமத்துவத்தன்மை அதிக அளவில் உணரப்படுகிறதென்பதே நடைமுறையாக உள்ளது. உலகமயமாக்கம் இன்று இந்த சமுதாய முதலீட்டுப் பாலத்தை உலகின் எந்த மூலையில் இருந்தும் சமுதாயங்கள் வழங்குவதற்கான தொழில்நுட்ப சந்தை வங்கி வசதிகளை ஏற்படுத்தியுள்ளன. இதனைப் பயன்படுத்தி தமிழர்கள் சமுக முதலீட்டுப் பாலங்களை உருவாக்கி தங்களை உலக மக்களுடன் இணைத்துக் கொள்வது சமகாலத்தின் தேவையாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற பாலியல் அறமுறைக்கு எதிரானது 21ம் நூற்றாண்டுப் பெண்களின் முடிவான முடிபு

## இதனை இன்றைய ஊடகங்கள் உரிய முறையில் வெளியிடவில்லை எனப் பெண்கள் குறைபாடு




1988ல் லியா தொம்சனும் விக்டோரியா ஜக்சனும் நடித்து வெளிவந்த கசுவல் செக்ஸ் ( " Casual Sex") என்னும் திரைப்படம் ஆண்களுடன் நெருங்கிப் பழகுவதற்குப் பாலியல் தொடுகைகள் நெருக்கங்கள் தேவை என்று கருதும் பெண் ஒருவருக்கும் பாலியல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான நெருக்கமான உறவுகளுக்கு தடையாக உள்ளதெனக் கருதும் ஒரு பெண்ணுக்கும் இடையில் உள்ள மனவித்தியாசங்களை அகலத்திரைத் திரைப்படமாக்கியது. பாலியலில் தொடுகைகளுடன் நெருங்கங்களுடன் பழகுவதை Casual Sex என்னும் சொல்லாட்சி கொண்டு குறிப்பது கதைப்பது வழமை. இதனைத் தமிழில் முறையற்ற பாலியல் என மொழிபெயர்ப்பது பொருத்தமானதாக அமையும். முறையற்ற பாலியல் எந்த அளவுக்கு பெண்களால் மனப்பூர்வமாக ஏற்கப்படுகிறது என்பது குறித்து ஆய்வு ஒன்று நடாத்தப்பட்டு உள்ளது.

அதில் இன்றைய 21ம் நூற்றாண்டுப் பெண்களில் 10க்கு9 பேர் முறையற்ற பாலியல் அறமுறைக்கு எதிரானது என்ற கருத்தை வெளியிட்டுள்ளது தெரிய வந்துள்ளது. அத்தகைய முறையற்ற பாலியல் பெண்களினால் வெறுக்கப்படுகிறதென்றும் அத்தகைய முறையற்ற பாலியலில் ஈடுபடும் அல்லது ஈடுபடுத்தப்படும் பெண்கள் கூட பாலியல் மகிழ்ச்சி என்ற முதன்மைக் காரணத்திற்கு அப்பாலான வேறு காரணங்களையே கொண்டுள்ளார்கள் என ஆய்வினை மேற்கொண்ட சிவ்பீல்ட் பல்கலைகழக உளவியல் வைத்தியக் கலாநிதி சரண் ஹின்ச்கிளிவ் (Dr Sharron Hinchcliffe – University of Sheffield) இன் கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன. இது குறித்து கருத்து தெரிவித்த உளவியல் வைத்தியர் சரண் ஹின்ச்கிளிவ் இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் நாம் காணும் பிணைப்புகள் அற்று பாலியல் திருப்தியை பெறும் உறவுகளை விரும்பும் சுதந்திரமான போக்கு உடைய பெண்கள் இன்றைய பெண்கள் என்கிற தவறான எண்ணத்தை மாற்றத்தக்க வகையில் புதிய கருத்தியலின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது என்கிறார். அவர் அத்தகையவர்கள் உண்மையில் தனிப்பட்ட பாலியல் மகிழ்ச்சி என்பதற்கு அப்பால் மனவிரக்தி தேவைகளை எதிர்பார்ப்புகளை பெறுதல் போன்ற ஏதாயினும் ஒன்று அல்லது போதை அல்லது குடி தரும் கட்டுப்பாடற்ற நிலையினாலேயே அவ்வாறு செயற்படுகிறார்கள் என விளக்கியுள்ளார். அவர்களில் ஆண்நடத்தையைப் பிரதி செய்தல் வேண்டுமென்னும் உணர்வே மேலோங்கி நிற்கிறது என்பது இவரின் கருத்து. 50வயதில் உள்ள பெண்களை விட 30வயதிற்குட்பட்ட பெண்களிடை அறநெறி உணர்வு அதிகமாக உள்ளதையும் ஆய்வு எடுத்து விளக்கியுள்ளது. இன்றைய பெண்களின் உண்மையான உளவியல் தன்மைகளை இன்றைய ஊடகங்கள் பிரதிபலிக்கவில்லை என்பதும் இவ்வாய்வில் பல பெண்களும் தெரிவித்த கருத்தாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் பிறந்த இடம் குறித்த புதிய தகவல்



கன்னியாக்குமரி மாவட்ட எல்லையில் உள்ள மலைப்பிரதேசத்தில் உள்ள வள்ளுவநாடு தான் திருவள்ளுவரின் பிறந்த இடமென எஸ் பத்மநாபானை தலைவராகக் கொண்ட மூவர் கொண்ட கன்னியாக்குமரி வரலாற்றுக் கலாச்சார ஆய்வு மையம் புதிய தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. வள்ளுவநாடு குறித்த குறிப்பு கி பி 9ம் 10ம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட செப்புப்பட்டயம் ஒன்றில் உள்ளதென ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர். இதன் அடிப்படையில் திருவள்ளுவநாட்டில் உள்ள திருநாயனார் குறிச்சியிலேயே பிறந்தார் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முட்டுக்காணியினர் என உள்ளூர் மக்களால் அழைக்கப்படும் காணிப் பழங்குடியினர் என்னும் இப்பகுதியில் வாழும் ஆதிப் பழங்குடி மக்களின் தலைவராகிய 105 வயதான கலியண் காணியிடமும் ஆய்வாளர்கள் செவ்வி எடுத்துள்ளனர். இவருடைய தகவலின் படி திருவள்ளுவரே தங்கள் பழங்குடியின் அரசர் எனவும் தானும் தனது மனைவியும் வள்ளுவநாட்டு மலைப்பிரதேசத்திற்குச் சென்று தேனும் தினையும் எடுத்து வாழ்வதாகவும் கூறியுள்ளார். திருவள்ளுவர் இளைப்பாறிய பாறையும் திருவள்ளுவரின் மனைவி அமரும் பாறையும் வள்ளுவன் கல் குன்று என்ற பெயரிலும் வள்ளுவத்தி குன்று என்ற பெயரிலும் போற்றப்பட்டு வருகிறதெனவும் இவர் கூறியுள்ளார். காணி பழங்குடிமக்களின் வாழ்வில் வள்ளுவப் போதனைகளின் வழிநடத்தல் நிறைய உண்டெனவும் ஆய்வாளர்கள் தங்கள் அவதானிப்புகளின் பின்னணியில் குறிப்பிட்டுள்ளனர். வரலாற்று ஆய்வுமையம் தற்பொழுது வள்ளுவன்குன்றைப் பாதுகாக்கும் பணிகளைத் தொடங்கியுள்ளது. இதுவரை வள்ளுவர் மைலாப்பூரில் கி மு 30ம் ஆண்டளவில் பிறந்து வாழ்ந்தார் என்றே ஆய்வாளர்கள் நம்பி வருகின்றனர்.

# யார் அவர் ?

உலகின் மிகமுக்கிய மனிதர் ஒருவர் யூலை 2008 முதல் ஒவ்வொரு நாளும் அலுவல கத்துக்குச் சென்று அதனை இயக்குவதை நிறுத்தப்போவதாக கூறியுள்ளார் யார் அவர்?



அது வேறு யாருமல்ல பில் கேட் தான். 1975ல் மைக்கிரோ சொவ்ட் நிறுவனத்தை இளவயதில் ( இடதிலிருந்து முதலாவது படம்) தனது பல்கலைகழகத் தோழன் போல் அலன் (2வது படத்தில் வலது அடியில் உள்ளவர்) உடன் பல்கலைகழகத்தை விட்டுவிலகித் தொடங்கிய பில்கேட் ( 3வது படம்) 27 பில்லியன் சொத்தினை தேடிய பின்னர் யூலை 2008 முதல் றே ஓசியிடம் (வலதில் உள்ள கடைசிப்படம்) மைக்கிரோ சொவ்ட்டின் தினப்பணிகளை ஒப்படைக்கவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியை காதலியை விட உதைபந்தாட்டக் கழகத்திற்கு அதிக விசுவாசமாக இருக்கும் ஆண்கள்



தங்களுடைய மனைவியை காதலியை விட தங்களின் உதைபந்தாட்டக் குழுவிற்கே ஆண்கள் அதிகம் விசுவாசமாக இருக்கின்றார்கள் என்ற புள்ளிவிபர ஆய்வு வெளியாகியுள்ளது.

தங்களின் அபிமான உதைபந்தாட்டக்குழு எவ்விதமான முறையில் விளையாடினாலும் கூட அதனை விட்டுப் பிரியமாட்டோம் என 94 வீதமான ஆண்கள் உறுதி கூறியுள்ளனர். ஆனால் தங்களது மனைவியுடனோ அல்லது காதலியுடனோ ஏதாயினும் பிரச்சினை வந்தால் அவர்களைக் கைவிட்டுச் செல்லத் தாங்கள் தயார் என 52 வீதமான ஆண்கள் பதிலளித்துள்ளனர். இவ்வாய்வினை மேற்கொண்ட ஆய்வாளர்கள் ஆண்கள் தங்கள் உதைபந்தாட்டக் குழுவிற்கு காட்டுகின்ற விசுவாசத்தில் நட்பில் அர்ப்பணிப்பில் பற்றில் அரைப்பங்கு அளவாவது மனைவி மேல் காட்டினால் ஒரு இரவிலேயே திருமண விலக்குகள் அரைவாசியாகிவிடும் எனக் கூறியுள்ளனர்.

உளவியல் வைத்தியர் எரிக் சிக்மனின் கருத்துப்படி வேலைகளும் உறவுகளும் வந்து வந்து போய்க்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஆண்களின் பற்றுக்குரியதாக உதைபந்தாட்டம் மாறியுள்ளது என்கிறார். இதனால் ஆண்கள் பெருந்தொகையான பணத்தைக் கூட மனைவியை விட காதலியை விட உதைபந்தாட்டத்தில் செலவிடுகின்றனர் என மற்றொரு ஆய்வு தெரிவித்துள்ளது. ஆண் ஒருவர் சராசரியாக 3465 பவுண்ஸ்களை ஆண்டொன்றுக்கு உதைபந்தாட்டத்தில் செலவிடும் அதே வேளை தனது மனைவிக்கென ஆண்டொன்றுக்கு 997 பவுண்ஸ்களையே செலவிடுகின்றார் என ஆய்வு கணித்து உள்ளது. 2000 ஆண்களிடை நடாத்தப்பட்ட உலக உதைபந்தாட்டப் போட்டிகள் குறித்த ஆய்வில் 15 வீதமானவர்கள் தாங்கள் கடனாளிகளாகினாலும் உலகப் போட்டிகளில் தாங்கள் ஆதரிக்கும் உதைபந்தாட்டக் குழு போட்டியிடும் பொழுது மைதான நுழைவுச் சீட்டு வாங்கியே ஆவோம் எனக் கூறியுள்ளனர். கடந்த ஆண்டு மோர்கன் ஸ்ரான்லி நிதி நிறுவனத்தினர் நடாத்திய ஆய்வு ஒன்று கடந்த ஆண்டில் உதைபந்தாட்டப் போட்டிக்கான பருவகால நுழைவுச்சீட்டுக்கள் தொலைக்காட்சி சேவைகள் போன்றவறறில் 23 பில்லியன் பணம் உதைபந்தாட்ட இரசிகப் பெருமக்களால் செலவிடப்பட்டுள்ளதென அறிவித்துள்ளது. மற்றொரு ஆய்வில் நான்கு உதைபந்தாட்ட இரசிகர்களுக்கு ஒருவர் தாங்கள் தங்கள் குடும்பத்தில் சாவீடு நடந்தாலும் கூட அதனைப் பொருட்படுத்தாது உதைபந்தாட்டத்தை கண்டு களிப்பர் எனத் தெரிவித்துள்ளமை எவ்வளவு தூரத்திற்கு உதைபந்தாட்டம் ஆண்களை மயக்கும் போதையுணர்வு ஆகியுள்ளதென்பதை வெளிப்படுத்தியுள்ளது.

மேலும் உதைபந்தாட்டம் தங்களின் உணர்ச்சிகளின் வடிகளமாக மாறியுள்ளதென்னும் ஆண்கள் தங்களில் 40வீதமானவர்கள் உதைபந்தாட்டத்தைக் கண்டு களிக்கையில் ஒன்றில் ஆனந்தவெள்ளத்திலோ அல்லது சோகமயத்திலோ திளைப்பதாகக் கூறியுள்ளனர். அத்துடன் 30 வீதமானவர்கள் உதைபந்தாட்டம் மற்றைய ஆண்களுடன் தாங்கள் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான கருவியாக உள்ளதென்று கூறியுள்ளனர்.

இவற்றின் அடிப்படையில் உளவியல் வைத்தியர் எரிக் சிக்மன் உதைபந்தாட்டம் ஆண்களுக்குத் தங்களின் உணர்ச்சிகளை வெளியிடுவதற்கான ஊக்கியாக உள்ளதென வர்ணித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பொன்விகிதாசாரம் ( The Golden Ratio)

<u>உங்கள் கணித அறிவுக்கு ஒரு கேள்வி</u>

முயல் பிறந்து ஒரு மாதத்தில் குட்டி போடுவதற்கு ஏற்ற பாலியல்தன்மையைப் பெறுகிறது. மேலும் முயலுக்கு குட்டி பிறக்கும் காலம் கருக்கட்டிய 40வது நாள். முயல் வளர்க்க விரும்பிய ஒருவர் ஒரு ஆண் முயலையும் ஒரு பெண் முயலையும் மாதத்தின் முதல் நாளில் வாங்கி வளர்க்கத் தொடங்கினார்.. அவை இரண்டு மாத முடிவில் ஒரு ஆண்முயற் குட்டியையும் பெண் முயற் குட்டியையும் ஈன்றன. அவற்றின் குட்டிகளும் ஒரு ஆண் முயற் குட்டியையும் ஒரு பெண் முயற் குட்டியையும் இரண்டு மாதமுடிவில் ஈனுகின்ற மரபுத் தன்மையைக் கொண்டிருந்தன. அவ்வாறாயின் ஒரு வருட முடிவில் எத்தனை முயற் சோடிகள் இருக்கும்? முயன்று பாருங்கள். பின்னர் செய்கை முறையையும் விடையையும் பாருங்கள்.

<u>செய்கைமுறையும் விடையும்</u>

முயலை வாங்கிய முதல் மாதத்தின் முதல் நாளில் 1 சோடி முயல்கள்.
அதற்கு அடுத்த மாதத்து முதல்நாளில் 40 நாள் வராதபடியால் 1 சோடி முயல்கள் தான்.
மூன்றாவது மாதத்து முதல் நாளில் ஒரு சோடி குட்டி பிறந்து விடும் எனவே 2 சோடிகள்.
நான்காவது மாதத்தில் முதற் சோடி மட்டும் குட்டி போடுவதால் 3 சோடிகள்.
ஐந்தாவது மாதத்தில் முதற் சோடியும் 2 வது சோடியும் குட்டி போட்டதால் 5 சோடிகள்.




இவ்வாறாக ஒவ்வொரு மாதத்தையும் எடுத்தோமானால் முயற் சோடிகளின் எண்ணிக்கை பின்வரும் தொடராக அமையும்.


1, 1, 2, 3, 5, 8, 13, 21, 34, 55, 89, 144............

எனவே 12 மாதமுடிவில் 144 முயற் சோடிகள் அல்லது 288 முயல்கள் முயல் வளர்ப்பவரிடம் இருக்கும்.

இவ்விதமான முயல் வளர்ப்பு மூலம் அதிகலாபம் பெறலாம் என்பதினால் இந்த தொடரை பொன்தொடர் (Golden Series) என அழைப்பதுண்டு. மேலும் தொடரில் 21 ஐ 13 ஆல் வகுத்தால் அல்லது 34ஐ 21 ஆல் வகுத்தால் அல்லது 55ஐ 34ஆல் வகுத்தால் விடை கிட்டத்தட்ட 1புள்ளி61803 ஆக அமையும். இந்த விகிதாசாரத்தை பொன் விகிதாசாரம் ( Golden Ratio) என அழைப்பர். இந்தப் போக்கு கோலிபிளவர் நத்தை ஆதியனவற்றின் வளர்ப்பிலும் பொருந்தும் என்பது கணிதவியலாளரின் கருத்து. இதனை முதன்முதலில் கண்டு விளக்கிய இத்தாலிய கணிதவியலாளர் லெனார்டோ பிபினோசியின் (Leonardo Fibonacci) பெயரால் இத்தகைய கணித தொடர்கள் பிபினோசி தொடர்கள் (The Fibonacci sequence) என அழைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் சைவத்திற்கும் தமிழுக்கும் அடையாளமாகி நிற்கும் ஹம் நகர் காமாட்சி அம்மன்



குறைவற முப்பத்திரண்டறம் புரிகின்ற
பேதை – மனிதப் பிறவி நிறைவுறக்
காஞ்சியில் காமாட்சியான கோதை
ஹம்மில் பேராட்சி கொண்டமர்ந்தாளே



"தாளணி நூபுரஞ் செம்பட்டுத் தானுடை
வாரணி கொங்கை மலர்கண்ணால் வாளிவில்
ஏரணி அங்குச பாசம் எழில்முடி
காரணி மாமணிக் குண்டலக் காதிக்கே"

திருமந்திரம்

சிலம்பணி திருப்பாதங்களும் செம்பட்டுச்
சேலையும் வார் அணி மார்பும் திருக்கைகளில்
வில்வடிவக் கரும்பும் அங்குசமும் பாசமும்
திருமுடியில் மாணிக்க மணிக் கிரீடமும்
கருநீலக் குண்டலங்கள் காதுகளிலும் ஒளிர
காட்சி தரும் காமாட்சி அருளாட்சியில்லையேல்
எவ்வாட்சி பெற்றார்க்கும் உய்வில்லை –
உய்வுண்டு எவ்விதியுற்றார்க்கும் அவள்
திருக்காட்சி காண்கின்ற அச்சணமே!







ஜேர்மனியின் ஹம் (Hamm/Westphalia) நகரில் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள அன்னைகாமாட்சி புலம்பெயர் தமிழுலகின் சைவத்தினதும் தமிழினதும் அடையாளமாகி நிற்கின்றாள். காஞ்சி காமக் கோடியில் தவநிலை பயின்று வந்த சிவ பாஸ்கரக் குருக்களினால் 1989ல் தொடங்கப்பெற்ற ஹம் காமாட்சி அம்மன் ஆலயத்தில் 1993ல் மூவாயிரம் பக்தர்கள் புடை சூழ அன்னை காமாட்சியின் தேர்த்திருவிழா தெருவீதி வலம் வந்து ஜேர்மன் மண்ணில் அதிக அளவில் பக்தர்கள் கலந்து கொண்ட முதல் சைவாலயத் தேர் என்ற வரலாற்றை தொடக்கி வைத்தது. இந்த அடியார்கள் தொகை 2000ல் 10000 ஐ தாண்டி தற்பொழுது 12.000 முதல் 15.000 தமிழ் மக்கள் மதவேறுபாடின்றி ஒன்று கூடும் தமிழர் ஆன்மீகத் தேசிய மையங்களில் ஒன்றாக ஹம் காமாட்சி அம்மன் ஆலயத்தை மாற்றியுள்ளது. இங்குதான் 1994ல் முதன்முதலில் அங்கப்பிரதட்சணத்தை ஜேர்மனியர்கள் கண்டனரென ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். 2000ம் ஆண்டில் 50 அடி உயரத் திருக்கோபுரத்துடனான அழகுக் கோயிலாக திருப்பணி செய்யப்பெற்ற இக்கோயில் இன்று ஐரோப்பாவில் உள்ள முக்கிய சைவ ஆலயங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.

இவ்விடத்தில் காஞ்சி காமாட்சி திருக்கோவில் குறித்தும் எடுத்து நோக்கினால்தான் அன்னை காமாட்சி வழிபாடு தமிழர் ஆன்மீகத்தின் தொன்மையைத் தான்மையை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்கிற தெளிவைப் பெற முடியும். காஞ்சிபுரம் ஆயிரத்து எட்டு சிவாலயங்கள் சூழ இருந்த தொல்பதி எனப் பாடல்கள் கூறினும் இன்று சுமார் நூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயங்கள் அமைந்த ஆன்மீக பதியாகவே காஞ்சிபுரம் காட்சியளிக்கிறது. இவ்வாலயங்கள் அனைத்தும் காஞ்சி காமாட்சி ஆலயத்தை மையமாகக் கொண்டே அமைக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் காமாட்சி கோயிலில் சிவபெருமான் சந்நிதியில்லை. அவ்வாறே இங்கு நின்ற கோலத்தில் அல்லாது அமர்ந்த கோலத்தில் அன்னை காட்சியளிக்கின்றாள். அத்துடன் சக்கரத்தின் மேல் மூர்த்தியை பிரதிட்டை செய்யும் வழமைக்கு மாறாக மூலவர் முன்பாக சக்கரம் பொறிக்கப்பட்டு உள்ளது. இவை தமிழர்களின் தொன்மை வழிபாடுகளான கொற்றவை வழிபாடு முருக வழிபாட்டின் தான்மையை உணர்த்துகின்றன. சமஸ்கிருத மேல்நிலையாக்கப்பட்ட ஆகமவழிப்பட்ட வழிபாடாக சக்தி வழிபாடு மாற்றம் பெற்ற பொழுது காமாட்சி அம்மன் வழிபாடாக அச் சக்தி வழிபாடு பரிணாம வளர்ச்சி கண்டது. இது சிதம்பரம் தில்லைக்காளியின் சக்தி வழிபாட்டுத் தலமாக இருந்து பின்னர் சிவவழிபாட்டுத் தலமாக பரிணாமம் அடைந்தது போன்றதென்பர். இவ்வகையில் சக்தி வழிபாடு என்பது தமிழரின் தொன்மையை இனங் காண்பதற்கான அடையாளமாகவும் உள்ளது.

## முதன்மைப் பூமியில் முதன்மையானவளுக்கு வழிபாடு

காஞ்சி என்றால் மேகலை என்று பொருள். அந்த வகையில் உலகத்தின் மைய இடம் என முன்னோர் கருதிய காஞ்சி பூமாதேவியின் மேகலை போல் இருப்பதினால் அவ்விடத்திற்கும் அப்பெயரைச் சூட்டினார் என்பது ஒரு விளக்கமாக உள்ளது. அவ்வாறே ஆதிபீடம் என்று அழைக்கப்படும் காமக்கோட்டம் உலகுக்கும் பாரதத்திற்கும் உந்து சுழியாக அமைகிறது என்பது வேறு சிலரின் கருத்து. இதனை வலியுறுத்தும் வகையில் சிவஞான முனிவர் காஞ்சி புராணத்தில்

அணையால் பரப்பு நுண்பிலமாகி அருட்பரவெளியாய்த் திகழும்
அணைகடல் உடுக்கை நிலமகட்குந்தி ஸ்தானமாம்.

என்கிறார். இங்கே எழுந்தருளியுள்ள அன்னையைச் சுற்றியே அகிலாண்டத்தின் இயக்கமும் பேரரசுக்களின் அசைவும் உள்ளன என நம் முன்னோர் நம்பியதால் காமாட்சி அன்னை இராஜஇராஜேஸ்வரி என்கிற சிறப்பு பெயர் கொண்டும் அழைக்கப்பட்டாள். தமிழ்நாட்டில் உள்ள 9 சக்தி பீடங்களான காஞ்சிபுரம் திருவாரூர் திருக்கடவூர் திருவானைக்கா மதுரை கூத்தனூர் சங்கரன்கோயில் குற்றாலம் என்பவற்றில் காமாட்சி அம்மனால் காஞ்சி தனியான இடத்தை வகிக்கின்றது.

## காமாட்சி என்ற பெயர் குறித்த விளக்கங்கள்

இறைவனை நெற்றிக் கண் என்னும் அங்கமாகவும் பிரமனும் திருமாலும் மற்றைய இரு கண்களாகவும் கொண்டவள் அன்னை காமாட்சி என்பது முன்னோர் மரபு. க என்பது பிரமனையும் அ என்பது திருமாலையும் ம என்பது உருத்திரனையும் குறிக்கும் ஓசைகள் எனவும் அட்சி என்பது கண்ணை உடையவள் என்று பொருள்படுமெனவும் இவற்றின் இணைப்பாகவே க + ம + அட்சி என்னும் இணைவின் நீட்சியாக காமாட்சி என்கிற அன்னையின் திருநாமம் உருவானது என்பார்களும் உள. அதே வேளையில் கா கலைமகளையும் மா திருமகளையும் குறிக்கும் எனவும் கலைகளையும் செல்வத்தையும் அருளும் விழிகளை உடையவளான அன்னை பராசக்தி கா + மா + அட்சி = காமாட்சி என அழைக்கப்பட்டாள் எனக் கருதுவாரும் உள்ர். வலது விழி ஞானத்தையும் இடது விழி போகத்தையும் அருளையும் அளிப்பதினால் அபயவரதகரங்களின்றி நான்கு கரங்களிலும் பாசம் அங்குசம் மலர்அம்பு கரும்புவில் தாங்குபவளாக அன்னை காட்சி நல்குகின்றாள். ஆக்கல் காத்தல் படைத்தல் என்னும் அம்சங்களையும் ஞானம் செல்வம் என்னும் அருளல் தன்மைகளையும் தன்னிடத்தில் கொண்டவள் காமாட்சி என்பதினால் அவள் கோவில் கொண்டெழுந்தருளிய காமக் கோட்டம் என்றாலே விரும்பியவற்றை வழங்கும் கோவில் என்கிற பொருளும் மக்களிடை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண ரீதியாக இங்கு காமாட்சி அன்னை ஆற்று மண்ணில் சிவலிங்கம் அமைத்து தவமிருந்த நேரம் ஆற்று வெள்ளம் பெருகிய பொழுது அன்னை தன் இருகரங்களாலும் லிங்கத்தை இறுக அணைத்த பொழுது சிவசக்தி நிலை கண்டு ஆற்று வெள்ளம் தணிந்தது என்றும் பின்னர் ஏகமாய் (தனியாய் முதலாய்) அம்பரனாய் ( எங்கும் நிறைந்து இருப்பவனாய்) திகழும் ஏகாம்பரத்தை சிவத்தை புறத்திலும் தழுவி திருமணம் செய்தாள் என்று கூறப்படுகிறது. ஆதி பராசக்தி தவமிருந்த திருக்கோலத்திலேயே சிலைவடிவுற்றாள் எனவும் இதனால் காமாட்சியின் அழகாட்சி மற்றெல்லாத் திருக்கோலங்களையும் விஞ்சுவதாக உள்ளதாக கொள்ளுதல் மரபு.



இங்கு அன்னை ஸ்தூலம் சூட்சுமம் காரணம் என்னும் மூன்று நிலைகளிலும் திகழ்வதினால் அம்மூவகை வடிவையும் பிரதிபலிக்கும் காமகோடி காமாட்சி அஞ்சன காமாட்சி ( அரூபலட்சுமி) காமகோடி பீடம் ( ஸ்ரீசக்கரம்) என்பன காஞ்சியில் காணப்படுகிறது. அன்னையின் தவத்தின் சாயலாக அருகில் உள்ள ஏகம்பரநாதர் திருக்கோயிலில் மணலினாலான இலிங்கமாதலால் அபிசேகத்திற்குப் பதிலாகப் புனுகுச்சட்டம் சாத்தப்பெறுகிறது. அவ்வாறே அன்னை தவமிருந்த மாமரம் 3500 ஆண்டுகள் பழமைமிக்கது எனவும் இதில் நான்கு வேதங்களையும் குறிக்க நான்கு கிளைகளும் இனிப்பு துவர்ப்பு புளிப்பு கார்ப்பு என்னும் நால்வகைச் சுவையுள்ள பழங்களை தரும் தன்மையும் இம்மரத்திற்கு உண்டு என்பர். 1.தென்னகத் திருக்கோயில்கள் தோற்றமும் வளர்ச்சியும் - சுப்பிரமணியம் கந்தசுவாமி 2002 2. Vows in Diasporic Contexts:Hindu Tamils in Germany - Martin Bauman 2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை பார்த்தமை உடல் நலத்திற்கு உதவியுள்ளது





உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை மக்கள் பார்த்தமையினால் வைத்தியசாலை அவசர உளநோய்ச் சிகிச்சைப் பிரிவு அனுமதிகள் 14 வீதத்தால் குறைவடைந்ததாக ஸ்கொட்லாந்து ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். பொதுநோக்கொன்றில் மனதைச் செலுத்தியதும் தேசிய உணர்வால் தூண்டப்பட்டதும் உள்ளங்களில் திருப்பங்களை ஏற்படுத்தியமையே உளவியல் தாக்கங்கள் குறைவுற்றமைக்கான காரணங்களாக ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. மேலும் தோல்விகள் கூட தாங்கும் மனவலிமையைப் பார்வையார்களிடை அதிகரிக்க வைத்துள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.




நடுவர் உதைபந்தாட்டப் போட்டிகளில் தீர்மானங்களை மேற்கொள்கையில் அவை சரியான முறையில் மேற்கொள்ளப்படடதா என்கிற விரக்தி பார்வையாளர்களிடை ஏற்படுவதாகவும் லைன்ஸ் மென் ஓவ் சைட் கொடியினை உயர்த்தும் பொழுது அது சரியான முறையில் மேற்கொள்ளப்படுகிறதா என்கிற விரக்தி ஏற்படுவது இயல்பானதாக உள்ளதென்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பிரித்தானிய விஞ்ஞானிகள் மைதானத்தில் இல்லாது வேறு ஒரு பொருத்தமான இடத்தில் இருந்து கருவிகளைக் கொண்டு அவதானிப்புக்களை மேற்கொண்டு முடிவுகளை நடுவர்க்கு தெரிவிக்கும் முறைகள் தோற்றம் பெற்றால் இந்த விரக்திகள் குறைவதற்கான வாய்ப்புகள் உண்டெனத் தெரிவித்துள்ளனர்.




அதே போல் பனால்டி அடிக்கும் பொழுது பார்வையாளர்கள் இடை மனஆர்வம் உளத் தாக்கத்தை கொடுக்கக் கூடிய அளவுக்கு அதிகரிக்கிறது எனக்கூறும் ஆய்வாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனால்டியைக் கோலாக மாற்றத் தவறும் விளையாட்டு வீரனின்மேலும் வெறுப்புணர்வு ஆதரவாளரிடை உடன் பரவுவது வழக்கமாகி விட்டதென்கின்றனர்.



ஆயினும் பனால்டி அடிப்பதில் கலைத்துவம் மட்டுமல்ல விஞ்ஞானமுறைமையும் உண்டு என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அடிப்பவரின் குதிக்கால் பந்தை நோக்கி வரும் விதத்தை அவதானிப்பதன் மூலம் பந்து எந்தத்திசையில் செல்லப்போகிறதென கணிக்க முடியும் எனவும் சில காப்பாளர்கள் இந்தக் கணிப்பை செம்மையாகச் செய்வதினால்தான் பந்து தடுக்கப்படுகிறது எனவும் குறிப்பிடும் ஆய்வாளர்கள். இந்த விஞ்ஞான நுணுக்கத்தைப் புரிந்து கொள்ளாது பனால்டி அடிக்கத் தவறும் விளையாட்டு வீரர் மேல் வெறுப்பை வெளிப்படுத்துவது அர்த்தமற்றது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டுமென்கின்றனர்.



இதிலே வாழைப்பழ அடி என்று ஒருவகை பனால்டி அடி உள்ளது. இதில் பந்தில் கால் பட்டதும் தன்னளவில் சுழன்றபடி வேகமாக செல்லும் பந்தில் வீசுகின்ற காற்று ஏற்படுத்தும் அழுத்தம் காரணமாக சிலவேளைகளில் பந்து திடீரென யாருமே ஏதிர்பாராத கோணத்தில் வளைந்து பாய்ந்து செல்லும் அல்லது வளைந்து வேகத்தேய்வு பெற்றுவிடும்.



---- 2006ம் ஆண்டு உதைபந்தாட்ட முகமூடி இரசிகப் பொம்மை

மேலும் பந்தின் வடிவமைப்பிலும் பந்தின் சுழற்சி வேகம் தங்கியுள்ளது. பக்மினிஸ்டர் பந்து என்றே இன்றைய பந்துகள் அழைக்கப்படுவது வழமை. அமெரிக்கக் கட்டிடக்கலைக் கலைஞரான ரிச்சர்ட் பக்மினிஸ்டர் மிக குறைந்த அளவிலான மூலவளங்களைப் பயன்படுத்திக் கட்டிடங்களை அமைப்பதற்கு ஏற்றவகையில் வரைபுவடிவங்களை அமைப்பதில் வல்லவர். இவரது அறிவுப் பின்னணியில் 20 அறுகோணங்களையும் 12 ஐங்கோணங்களையும் கொண்ட தோல்கள் வெட்டப்பட்டு அவை ஒன்றாக திணிக்கப்பட்டு வட்டவடிவ பந்து தயாரிக்கப்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலும் உதைபந்தாட்ட ஆற்றல் என்பது பரம்பரை அணுக்களில் தங்கியுள்ளதென்பது சில விஞ்ஞானிகளின் கருத்து. மோதிர விரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடையுள்ள நீளத்தை ஒப்பீடு செய்வதன் மூலம் ஒருவரின் உதைபந்தாட்ட திறனை பொதுவாக மதிப்பிடலாம் என்பது இவர்களின் வாதமாக உள்ளது. மோதிர விரல் சுட்டு விரலை விட நீளமாக இருப்பின் உதைபந்தாட்டத்தில் புத்திசாதுரியம் மிக்கவர்களாக அவர்கள் விளங்குவர் என்னும் இவர்கள் பிரையன் றொபின்சன் ஓசி ஆர்டில்ஸ் கிலன் ஹொாடில் சேர் ஸ்ரான்லி மத்தியூஸ் மற்றும் ஹாசா போன்ற பல முன்னாள் விளையாட்;டு வீரர்களில் இந்தக் கண்டுபிடிப்பு மெய்ப்பிக்கப் பட்டுள்ளதாக வாதாடுவார்கள். உதைபந்தாட்ட வீரருக்கு எந்த வகையிலும் உதவாத கைவிரல்களைக் கொண்டு எப்படி உதைபந்தாட்ட திறனை மதிப்பிடுவது என்கிற நியாயமான கேள்வி உங்களுக்கு எழலாம். உண்மையில் கைவிரல்களைக் கொண்டு ஒருவரின் உடலில் உள்ள ஹோர்மன்களில் ஒன்றான டெஸ்டோஸ்ரோனின் (testosterone) அளவு மதிப்பிடப்படுகிறது. இந்த டெஸ்டோஸ்ரோன் தான் பலத்தையும் கண்ணால் நாம் காணும் வெளியில் நாம் எவ்வாறு செயற்படல் வேண்டுமென்னும் மதிப்பீட்டு ஆற்றலையும் அளிக்கிறது. இது இரண்டும் ஒரு உதைபந்தாட்ட வீரருக்கு அவசியம் என்பதினாலேயே உதைபந்தாட்டத்துடன் தொடர்பில்லாத கைவிரல்கள் கொண்டு விஞ்ஞானிகள் ஒரு உதைபந்தாட்ட வீரரின் திறனை மதிப்பிடுகின்றனர். ஆண்குழந்தையைப் பொறுத்தமட்டில் தாயின் கருப்பையில் எட்டு முதல் பன்னிரெண்டு கிழமைச் சிசுவாக இருக்கையில் அதன் உடல் உறுப்புகள்




1998ல் தங்கப்பந்தையும் 2002ம் ஆண்டில் உலக உதைபந்தாட்டப் போட்டியில் எட்டு கோல்களை அடித்து அடிடாஸின் தங்கச் சப்பாத்தையும் பெற்ற பிரேசிலின் விளையாட்டு வீரர் றொனால்டோ ஆறு கோல்களையே இம்முறை அடித்தார்

டெஸ்டீடாஸ்ரன் ஹோர்மனினால் உணர்ச்சி பெறுகிறது. இதனால்தான் ஒரு குழந்தை பிறக்கும் பொழுதே கருவிலே திருவுடையதாகப் பிறக்கிறது போன்ற பழந்தமிழ் அனுபவமொழிகளும் பிறந்தன. ஆகவே உதைபந்தாட்ட ஆற்றல் மட்டுமல்ல ஒருவரின் பல்வேறு வகையான குணங்கள் ஆற்றல்கள் என்பன தாயின் கருவறையில் பெற்றதாகவே உள்ளன. ஆகையினால்தான் தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை என்ற பழமொழி கூடத் தோற்றம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் ஒரு மனிதன் வளர்ந்து வருகையில் தான் பெறும் அறிவு மேற்கொள்ளும் பயிற்சிகள் மூலம் தனது பரம்பரை அலகுத் தன்மைகளை மாற்றியமைக்கும் வலிமையையும் கொண்டுள்ளான். அதனால்தான் உதைபந்தாட்டத்திலும் பயிற்சி மனிதனை பூரணப்படுத்துகிறது என்கிற முதுமொழி உண்மையாவதைக் காண்கின்றோம். மேற்கூறிய பிறப்பிலேயே உதைபந்தாட்ட ஆற்றல் இல்லாதவர்களும் சுயபயிற்சியின் மூலம் தாங்கள் சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் ஆகியுள்ளதையும் விஞ்ஞானம் ஏற்றுக்கொள்கிறது. மைதானத்தில் சில நிமிட நேரங்கள் துள்ளிக்குதிப்பதினால் சிறந்த விளையாட்டு வீரராக முடியாது. சில மைல்களாவது ஓடி உடலைப் பயிற்றுவிக்க வேண்டிய தேவையுள்ளது. 1960களில் ரஸ்யர்கள் பயன்படுத்திய பிலியோமெட்ரிக் (plyometric) என்னும் பயிற்சி முறையே இங்கிலாந்தின் பயிற்சி முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.





பாடின்றிப் பட்டமில்லை

இந்தப் பயிற்சி உதைபந்தாட்டத்திற்கு மட்டுமல்ல மற்றைய வேகமாக ஓடுகிற பாய்கிற விளையாட்டுக்களுக்கும் உகந்ததாக அமைகிறது. இதில் இருநோக்குகள் உண்டு. ஒன்று பொதுவான மையத்தை நோக்கிய அசைவுப் பயிற்சி (concentric) மற்றையது முன்பின் நோக்கிய அசைவுப் பயிற்சி (eccentric ). பொதுவான மையத்தை நோக்கிய அசைவுப் பயிற்சியில் சதைகள் சுருங்குவதை இறுகுவதை தடுக்கக் கூடிய பயிற்சிகள் அமையும். முன்பின்நோக்கிய அசைவுப் பயிற்சியில் சதைகள் நீள்வதற்கும் அழுத்தங்களைத் தாங்குவதற்கும் உரிய வகையில் பயிற்சிகள் அமையும். உதாரணமாக மேல்கையில் மையத்தை நோக்கி சதை குவிந்தால் கை தோளை நோக்கி உயர்ந்து சதையை இறுகவைக்கும். மாறாக வேகமாக ஓடிய பின்னர் திடீரென நின்றால் முன்பின் நோக்கிய அசைவுப்பயிற்சி கால்சதைகள் உடனடியாக நீள்வதற்கான சக்தியினை அளித்து விழாதவாறு உறுதியாக நிற்க வைக்கும்.

உதைபந்தாட்ட வீரர்களைப் பொறுத்தவரை அவர்கள் மாறி மாறி சதைகள் இறுகுவதும் தளர்வதுமான நிலையில் விளையாட வேண்டியவர்கள். ஆகவேதான் அவர்களுக்கு இந்த சதைகள் இறுகுகின்ற நீள்கின்ற நேரங்களை குறைப்பதற்கான பிலியோ மெட்ரிக் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஆயினும் இந்த பயிற்சிகள் போதிய உடற்பலன் உள்ள பொழுதே அளிக்கப்படல் வேண்டும். உயரத்தில் ( 5அடி) இருந்து குதித்தல் நிலத்தில் குதித்ததும் உடனே தன்னை நிதானப்படுத்தி வேறு திசைகளில் ஓடத் தொடங்குதல் என்பன ஆபத்தான பயிற்சிகள் மட்டுமல்ல உடற்களைப்பை தரக்கூடிய பயிற்சிகளும் ஆகும். எனவே பிலியோமெட்ரிக் பயிற்சி எடுப்பதற்கான உணவுகளையும் உதைபந்தாட்ட வீரர்கள் உண்ணவேண்டியவர்களாக உள்ளனர்.

ஆர்சனல் உதைபந்தாட்டக் குழுவின் முகாமையாளர் ஆசன் வென்கர் 1966ல் முகாமையாளராக வந்ததும் முதலில் உதைபந்தாட்டக்குழுவின் உணவுவகைகளை மாற்றியமைத்தமையே பின்னர் அந்தக் குழுவின் பலவெற்றிகளுக்கு காரணமாகியது என்பாரும் உளர். சீனி உணவுகள் பானங்கள் சிவப்பு இறைச்சி கிழங்குப் பொரியல்கள் பொரியல் உணவுகள் பால்வகை உணவுகள் நீக்கப்பட்டு மரக்கறிகள் மீன் கோழியிறைச்சியுடன் நிறைய தண்ணீர் உதைபந்தாட்ட வீரர்களுக்கு குடிக்குமாறு பணிக்கப்பட்டது. அத்துடன் ஒருவரின் நீரேற்ற அளவை அவதானிக்கும் அட்டவணையையும் தினமும் நிரப்புமாறு கேட்கப்பெற்றது. உதைபந்தாட்ட வீரர்களுக்கான உணவு நாட்டுக்கு நாடு வேறுவிதமாகப் பேணப்பட்டது. 1996 யூரோ கிண்ணப் போட்டியில் பிரெஞ்சின் சத்துணவாளர்களால் பிரித்தானிய அணிக்கு வழங்கப்பெற்று வந்த தக்காளி சூப் ஸ்பெகற்றி பொலோனேய்ஸ் உணவுகள் வாயுவை கூட்டும் உணவுகள் என விமர்சிக்கப்பட்டது. பிரஞ்சு சத்துணவாளர்கள் தங்கள் குழுவினர்க்கு அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடச் செல்வதற்கு 3 மணித்தியாலங்களுக்கு முன்னர் 20 நமிடங்கள் வேகவைத்த 200 – 300 கிராம் உருளைக்கிழங்கையே சிறந்த உணவென வழங்கினர். இதில் உள்ள குளுசைடிஸ் சதைகளுக்குத் தொடர்ச்சியாக சத்தினை வழங்கும் என்றும் மேலும் தேவையான கனிமச் சத்துக்களை வழங்குமென்றும் அவர்கள் கருதினர்.



விளையாட்டுக்குப் பின்னரும் உடனடியாக அல்ககோல் பானங்களை அருந்துவது விளையாட்டு வீரரின் உடல்நலத்திற்கு நல்லதல்ல. காரணம் விளையாட்டின் பொழுது விளையாட்டு வீரரின் உடலில் நீர் அதிக அளவு இழக்கப்பட்டு மூட்டுக்கள் வீக்கமடைந்திருக்கும் இந்நிலையில் உடலுக்கு நீரேற்றம் தேவையான நேரம். அல்ககோல் உடனடியாக உடலால் உறிஞ்சப்பட்டு உடல் நோவை நீக்கினாலும் குடிப்பவரின் சிறுநீரில் அதிக அளவில் உடலில் உள்ள நீரை வெளியேற்றும். இதனால் உடலில் உள்ள நீரின் அளவு மேலும் குறையும் இதனால் உடலுக்கு கெடுதி ஏற்படும். ஆகவே விளையாட்டுக்குப்பின் ஐசோடொனிக் பானங்களைக் குடிப்பதே சிறந்தது என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. அவை குறைந்த சக்தியையும் உப்பையும் கொண்டுள்ளதால் விரைவில் நீரேற்றம் ஏற்பட உதவுகிறது. மேலும் உடலில் கலோரி சத்தைக் கூட்டி அதன் வழி இழந்த சக்தியை பெறவும் உதவுகிறது.

உதைபந்தாட்ட வீரர் ஒருவர் எவ்வாறாக விஞ்ஞான ரீதியாக உருவாக்கப்படுகின்றார் என்ற இக்கட்டுரை அவரது வெற்றியும் தோல்வியும் அவரின் முயற்சியில் மட்டுமல்ல கூட்டு மொத்தமான பயிற்சிகள் வழிநடத்தல் ஆதரவு என்பவற்றில் உண்டு என்பதைத் தெளிவாக்குகிறது. எனவே வெற்றியையும் தோல்வியையும் எந்த ஒரு தனி விளையாட்டு வீரரில் சுமத்தி உணர்ச்சிவயப்படாது விளையாட்டை இரசிக்கப் பழகுதல் அவசியம்.


## உதைபந்தாட்ட வரலாற்றின் இரு பெரும் துயரங்கள்

- 1985ல் யூரோ உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் இங்கிலாந்தின் லிவர்பூல் கழக ஆதரவாளர்களுக்கும் ஜேர்மனியின் யூவன்டஸ் கழக ஆதரவாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலவரத்தில் 39 பேர் உயிரிழந்த சோக வரலாறு பதிவாகியது. எல்லா ஆங்கிலேய கழகங்களும் யூரோ உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வது தடைசெய்யப்பட்டது.

- 1964ல் ஆர்ஜன்டீனாவுக்கும் பெருவுக்கும் இடையில் நடைபெற்ற உலக கிண்ணத்திற்கான தகுதி காண் ஆட்டத்தில் விளையாட்டு முடிவடைவதற்கு இரண்டு நிமிடங்கள் உள்ள பொழுது பெருவினர் அடித்த கோல் ஒன்று நடுவரால் மறுக்கப்பட்டதை அடுத்து மூண்ட கலவரத்தில் 318 பேர் கொல்லப்பட்டு 500 க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொச்சிக்கடைப் புனித அந்தோனியார் திருநாள்



யூன் மாதம் 13ம் நாள் புனித அந்தோனியாரின் திருநாள் தமிழக தமிழீழ கிறிஸ்தவர்களிடை முக்கிய ஆன்மீக விழாவாகக் கொண்டாடப்படுவது வழமை. அந்த வகையில் தென்னிலங்கையில் கொழும்பு கொச்சிக்கடையில் மலையகத் தமிழர்களும் கொழும்பு வாழ் தமிழர்களுமாக இணைந்து புனித அந்தோனியார்க்கு ஆலயம் அமைத்து



வருடாந்த விழாக் கொண்டாடத் தொடங்கியமை வரலாறு. ஆயினும் இன்று கொச்சிக்கடை சிங்களக் கிறிஸ்தவர்கள் அதிகமாக பங்கேற்கும் முறையில் திருவழிபாடுகள் நடந்த போதிலும் தமிழிலும் வழிபாடுகளை தொடரவைத்து தமிழ்க்கிறிஸ்தவர்கள் ஆலயத்துடன் தங்களுக்கு இருக்கும் தங்களின் தொன்மையை வெளிக்காட்டி வருகின்றனர். கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம் இனமதமொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் அனைத்து மக்களாலும் போற்றப்படும் ஆன்மீகத் தலமாக உள்ளது. மருதமடுத் திருப்பதிக்கு அடுத்ததாக அதிக அளவு யாத்திரிகர்கள் சென்று வரும் இடமாகவும் கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயம் திகழ்கிறது. இம்முறை கொச்சிக்கடையில் மக்கள் இனமதமொழி வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்று பட்டு திருவிழாக் கொண்டாடிய சில நாட்களுக்கு உள்ளேயே பேசாலையில் கத்தோலிக்க கிறிஸ்தவ ஆலயத்தில் திருமணப் பூசை ஒன்று நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் ஆலயத்துள் ஆயுததாக்குதலை சிறிலங்கா இராணுவம் நடாத்தியதில் 70 வயதான மூதாட்டி ஒருவர் உடன் கொல்லப்பட்டு 40 பக்தர்கள் காயம் அடைந்த நிகழ்ச்சி இலங்கையில் உள்ள அனைத்து ஆன்மீக நம்பிக்கை உடையவர்களிடையிலும் பலத்த தாக்கத்தையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பர்மாவின் புதிய தலைநகர் - பியின்மனா (Pyinmanna)

மாற்றத்திற்கான காரணம் புரியாது மேற்குலகு தடுமாற்றம்.




பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்கள் அதனுடைய தலைநகரான ரங்கூனைக் கைவிட்டு ரங்கூனிலிருந்து வடக்கே 400 கிலோ மைலில் உள்ள பியின்மாவைப் புதிய தலைநகராக அறிவித்துள்ளனர்.



கடந்த நவம்பரில் வெளியான அறிவிப்பை அடுத்து புதிய தலைநகரினை நிர்மாணிக்கும் வேலைகள் பர்மாவில் மிகவேகமாக நடந்தேறிக்கொண்டிருக்கிறது. வெளிநாட்டவர்கள் செய்தியாளர்கள் உட்பட இப்புதிய தலைநகரப் பகுதிக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. புதிய தலைநகரை படம்பிடிக்க முயன்ற ரங்கூன் செய்தி யாளர்களுக்குக்கூட 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மேலே உள்ள படங்களைக் கூட வெளிநாட்டு ஊடகங்கள் உள்ளூர்வாசிகள் மூலமே பெற்றுள்ளனர். இந்த தலைநகர் மாற்றத்திற்கான காரணம் புரியாத நிலையில் மேற்குலகு இதனை இரு நிலைகளில் எடுத்து நோக்குகிறது. ஒன்று வெளிநாட்டுத் தாக்குதலில் இருந்து தப்புவது இரண்டு சோதிட நம்பிக்கை என்பனவே அவை.


அங் சன் சூகி

உரோமில் அங் சன் சூகியின் 61வது பிறந்தநாள் போஸ்டரை நகர பிதா கட்டவிழ்த்து விடுகிறார்

மேலும் 60வயதான எதிர்க்கட்சி தலைவி அங் சன் சூகி (Aung San Suu Kyi ) ஐ விடுதலை செய்யும்படி ஐக்கியநாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கோரிக்கை விடுத்த நிலையில் தொடர்ந்தும் அவரின் வீட்டுக்காவலை பர்மிய அரசு நீடித்துள்ளது. இவ்வாறாக மேற்குலகை பகிரங்கமாக எதிர்க்கும் பர்மா தனது தலைநகரையும் மாற்றியுள்ளமை பர்மா தொடர்ந்தும் மேற்குலகுக்கு சவாலாகவே விளங்குவதற்கு தன்னைத் தானே தயார் படுத்துவதாக அமைந்துள்ளது என்பதே அவதானிகளின் கருத்தாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் திருமந்திரம் 21ம் நூற்றாண்டுக்கு எந்த அளவுக்குப் பொருத்தமுடையது?

## திருமூலர் குறித்த விளக்கம்

"*என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யமாறே*" என்று தன் பிறப்பின் நோக்கே தமிழ் செய்தல் என்று கூறிய தமிழ்ப் பெரு ஞானி திருமூலர்.

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

என்பது திருமூலர் அருள்வாக்கு. தமிழகத்தின் கும்பகோணம் மயிலாடுதுறை பெருஞ்சாலையில் நரசிங்கப்பேட்டை தொடர் உந்து நிலையத்திற்கு அண்மையில் காவரி நதிக்குத் தெற்காக உள்ள திருஆவடுதுறையில் இருந்தே திருமூலர் திருமந்திரமாலை என்னும் தன் இன்தமிழமுத நிறைமொழிகளை மொழிந்தார் என்பது மரபு.

## திருமந்திரமாலையின் நோக்கும் போக்கும்





நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊண்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தாமே

எனத் திருமூலரே தனது வாயினால் திருமந்திரத்தின் நோக்கினைத் தானே கூறுகிறார். நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வயைகம் என்பது தன்னலம் கருதா மானிடரின் உள்ளத்து ஆசை. அந்த உயர்ந்த மானிட உணர்வுடன் தான் பெற்ற இறையனுபவம் என்னும் பெரும் அனுபவத்தை திருமூலர் மக்களுடன் பகிர்ந்து கொள்ள முனைகிறார். அது தான் திருமந்திரமாலை. அந்த அனுபவம் வான்பற்றி நின்ற மறைபொருளுடன் திருமூலர் இணைத்து பெற்ற பேரனுபவம். அதனை திருமூலர் கூறுகையில் இறையனுபவம் எமது ஊணோடு கலந்து எம்முயிர் திருவருளுடன் ஒற்றுமைப் படல் வேண்டும் என்னும் உணர்வை எமக்குள் எழுப்பும். இதனையே உமாபதி சிவாச்சாரியாரும் உண்மை விளக்கத்தில்

ஊன் உயிரால் உயிர் வாழும் ஒருமைத்தே ஊனோடு உயிர்
தான் உணர்வோடு ஒன்றாம் தரம்.

என எடுத்து விளக்குகின்றார். உடலுக்கு உணவு சக்தியைத் தருவது போல இறையருள் உயிருக்குத் தன்னை தானே உணர்தல் என்னும் மகத்தான ஆற்றலை அளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் திருமந்திரத்தை படிக்கப் படிக்க உயிர் திருமந்திரத்தில் தமிழாகப் பரவிக் கிடக்கும் இறையருளில் எமது உயிர் உயிர்ப்புற்று இறைவனை தாவிப் பற்றிப் பிடித்துக்கொள்ளும். இவ்வாறு உயிர் இறைவனைப் பற்றப்பற்றப் உயிர் இறைவனை உணர்த்திடும் தன்மையை இறைவன் அருளுவான். இந்த உயிர் இரைறவனைப் பற்றுதல் என்னும் தன்மையை இறைவன் அருளுவான். இந்த உயிர் இறைவனைப் பற்றுதல் என்னும் செயலை ஊக்குவித்தல் என்பதே திருமந்திரமாலையின் நோக்காகப் போக்காக உள்ளது. எனவே திருமந்திரத்தை ஒப்புக்குப் படிக்காது பொருள் உணர்ந்து ஊன்றிப்படித்து உள்ளத்து இருத்தல் அவசியம். அதனையும் திருமூலர் பின்வரும் மந்திரத்தில் அழகாகக் கூறிச் செல்கிறார்

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்து அறிந்து ஓதிடின்
ஞானத் தலைவனை நண்ணுவர் அன்றே.!.

இவ்வாறாக இறைவன் மனிதமனதில் வாழ்பவன் அவனை உணர உதவுவது அவனது திருவருளே என்கிற உண்மையை உலகுக்கு உணர்த்திய திருமூலர் சைவசித்தாந்தம் என்னும் அன்பு தத்துவங்களின் அடித்தளத்தை இட்ட இறையருளாளராக உள்ளார். இருந்த போதிலும் அகச்சந்தானக் குரவர்களாக திருநந்தி தேவர் சனத்குமாரர் சத்யநயன தரிசினிகள் பரஞ்சோதி முனிவர் ஆகியோரையும் புறச்சந்தானக் குரவர்களாக மெய்கண்டார் அருணந்தி சிவம் மறைஞான சம்பந்தர் உமாபதி சிவாச்சாரியார் ஆகியோரைப் போற்றும் சைவ உலகு திருமூலரை அதுவும் திருநந்தி தேவரையே தனது ஞானகுருவாகக் கொண்ட திருமூலரை புறச்சந்தான குரவர்களுள் அடக்காது விட்டமை திருமூலரில் காணப்படும் புரட்சிகரமான கருத்துக்களால் என்று கருத இடமுண்டு.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமன் இல்லை நாணாமே
சென்றே புகும் கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலை பெற நீர் நினைந்து உய்மினே

என்று இற்றைக்கு பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் மனித சமத்துவத்தை மதங்களின் சமரசத்தை திரு மூலர் பேசியதும் அல்லாமல் அவ்வாறே மானிடத்தை கூறுபோடாது நல்லது நினைத்து வாழ்பவர்க்கு மரணம் இல்லை அவர்கள் காலமாகாது காலத்தில் வாழும் வரலாற்றை ஏற்படுத்துகின்றனர் எனவும் கூறி மரணமில்லாப் பெருவாழ்வுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதையும் அடித்துக் கூறுகிறார். அதே வேளை இத்தகைய உள்ள உறுதியிருப்பவர் தாங்கள் கொண்ட கொள்கையிலும் தங்கள் தேசியத்தன்மைகளில் உறுதியாக நின்று தங்களின் அடையாளத்தை தங்களின் தன்மானத்தை நிலைநாட்டிய வண்ணமே மற்றைய மனிதர்களை மற்றைய மதங்களைச் சமத்துவமாக நடத்துவர் என்பதை – நாணாமே சென்றே புகும் கதி இல்லை நும் சித்தத்து -நின்றே நிலை பெற நீர் நினைந்து உய்மினே – என்கிற வரிகளினால் தெளிவுபடுத்துகிறார். எனவே பிற நாடென்றும் பிற இனமென்றும் பிற மொழிஎன்றும் பிற மதமென்றும் தாவுவது மனித சமத்துவத்தின் வழியல்ல தன்இனம் தன்நாடு தன்மொழி தன்மதம் என்னும் உறுதியுடன் நின்ற வண்ணமே அடுத்தவன் சமத்துவத்திற்காய் உழைத்தலே உயர்ந்த வழி என்பதை திருமூலர் தெளிவாக ஒளிவு மறைவின்றி விளக்குகிறார். இத்தகைய பல கருத்துக்கள் திருமந்திரத்தில் மனிதநேயத்தையும் மனிததன்மையையும் இறையருள் நிழலில் விளக்குவதால் திருமந்திரம் அறிவுக்கு விளக்காகும் அதே நேரத்தில் ஆக்கிரமிப்பு உணர்வுள்ளவர்களால் திருமந்திரம் விலக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் வந்தது – வருகிறது என்பதும் கண்கூடு. அதனால் புறச்சந்தான குரவர்களுள் திருமூலர் வகுக்கப்படாவிட்டாலும் மக்கள் மனதில் நின்று அவரை அகற்ற முடியாத காரணத்தால் பத்தாந்திருமுறையாகத் திருமந்திரம் போற்றப்பட்டு சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் இன்றும் தொடர்கிறது. இந்நிலையில் திருமந்திரத்தின் கருத்துக்கள் இக்காலத்திற்கும் ஏற்றதா என்ற ஆய்வு திருமூலர் காண நினைத்த மகத்தான மனிதனை திருமூலர் பகிர்ந்து கொண்ட இணையில்லா இறைஞானத்தை நாமும் கண்டறிய கொண்டுயர உதவும்.

- அடுத்த .இதழில் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களுக்கு 32000 பாலியல் டெக்ஸ்ட்டுகளை 25000 பவுண்ஸ் செலவில் அனுப்பியவர்க்கு தண்டனை



ஏழு கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தி எட்டு மாதங்களில் 32000 பாலியல் டெக்ஸ்ட் செய்திகளை சிறுவர்களுக்கு எழுந்தமானமான முறையில் அனுப்பிய 42 வயதான றொயிஸ் றொபேர்ட்ஸ் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டார். 25000 பவுண்ஸ் செலவில் இந்தச் செயலை செய்துள்ள இவர் தனது நடத்தைக்கு மனவேதனை தெரிவித்துள்ளதுடன் தனது செயலின் மூலம் சிறுவர்களுக்கு அபாயம் ஏற்படும் சூழ்நிலையைத் தான் தோற்றுவித்தமையையும் எற்றுக் கொண்டுள்ளார். சாட் அறையில் ஏற்பட்ட காதல் தோல்வியே இவரை இத்தகைய அநாகரீகச் செயலைச் செய்யத் தூண்டியதாக தெரியவந்துள்ளது.

## காதலனுக்கு எய்ட்ஸ் வைரஸ் கிருமியை தொற்ற வைத்த காதலிக்கு 32 மாதச் சிறைத் தண்டனை



இன்று இவர் அன்று அவர்



இனி எவர்?

தன்னில் எய்ட்ஸ் வைரஸ் இருக்கிறது என்று தெரிந்த நிலையில் பாதுகாப்பற்ற பாலுறவுக்குத் தன்னுடைய காதலனைத் தூண்டி அதன் வழி அவனுக்கு எய்ட்ஸ் வைரஸை பரவவைத்த குற்றத்திற்காக இலண்டன் தெற்கு கெனிங்டன் பகுதியைச் சேர்ந்த 43 வயதான சரத் போர்ட்டருக்கு 32 மாதச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இருவருடங்களாக இவர் பல ஆண்களுடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொண்டுள்ளது தெரிய வந்து 2000 பேர் வரை விசாரணை செய்யப்பட்டு இவருடன் உறவு கொண்ட மூவர் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவருக்கு எய்ட்ஸ் தொற்றியிருப்பது தெரியவந்துள்ளது. இதற்கிடை எய்ட்ஸ் நோயாளி ஒருவரின் பாலியல் வாழ்க்கை வரலாற்றைத் துருவித்துருவி ஆராய முற்படுவது எய்ட்ஸ் நோயாளிகள் அனைவரும் கிரிமினல் குற்றவாளிகள் போல் கருதப்படும் நிலையை தோற்றுவித்துவிடுமென மனித நேய அமைப்புக்கள் அச்சம் தெரிவித்துள்ளன. கடந்த ஆண்டில் வேல்ஸ் பகுதியில் 15 வயது முதல் எய்ட்ஸ்ஸால் பீடிக்கப்பட்டு வாழ்ந்த இளம்பெண் 18 வயதில் தனது இளம் காதலனுக்கு எய்ட்ஸ் தொற்றக் காரணமானார் இரு வருட இளவயது தடுப்புத்தண்டனை பெற்றார். மேலும் 2005ல் இலண்டன் மிட்சம் பகுதியைச் சேர்ந்த டிக்கா என்னும் 38 வயது ஆண் ஒருவருக்கும் அவருடன் உறவு கொண்ட 2 குழந்தைகளுக்குத் தாயான பெண் ஒருவருக்கும் எய்ட்ஸ் நோயைத் தொற்ற வைத்தமைக்காக நாலரை வருட சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றார். இவர் ஏற்கனவே வேறு இரண்டு பெண்களுடன் உறவு கொண்டு அவர்களுக்கு எய்ட்ஸ் ஏற்படக் காரணமாகி தண்டனை பெற்று மேன்முறையீட்டில் விடுதலை பெற்று வாழ்ந்து வந்தவர் என்பதும் வழக்கின் போது தெரியவந்தது. கட்டுப்பாடற்ற பாலியலின் பாதுகாப்பற்ற உறவு முறைகளின் ஆபத்தை இவ்வழக்குகள் எடுத்து விளக்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவின் சூரிய தினத்துடன் இணைந்ததாக யூன் 24 கத்தோலிக்கரால் திருமுழுக்கருளப்பர் தினமாக்கப்பட்டது




இலங்கையில் திருமுழுக்கருளப்பர் (St John the Baptist) ஆலயங்கள் பலவற்றை கத்தோலிக்க மக்கள் வாழும் பகுதிகளில் காணலாம். விளான் சந்தி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி ஆகியவற்றில் நான் அறிந்த அளவில் மிகப்பெரிய ஆலயங்கள் திருமுழுக்கருளப்பரின் பெயரில் உள்ளன. ஐரோப்பாவின் கோடைச் சூரியத் தினமாகிய யூன் 21 ஆண்டுக்கான நீண்ட பகல் பொழுதைக் கொண்ட தினம். இத் தினத்துடன் இணைந்ததாக யூன் 24 கத்தோலிக்கர்களால் திருமுழுக்கருளப்பரின் தினமாக கொண்டாடப்படுகிறது. கத்தோலிக்க மரபில் ரோமர்களின் இயற்கையைக் கொண்டாடும் தினங்கள் கத்தோலிக்கர்களின் திருநாட்களாக மாற்றப்பட்டமை வரலாறு.

திருமுழுக்கருளப்பரை யோவான் என்றும் அழைப்பதுண்டு. ஆனால் இயேசுவின் அன்புக்குரிய சீடராக இருந்து நற்செய்தியை எழுதிய யோவான் வேறு இயேசுவுக்குத் திருமுழுக்களித்த யோவான் வேறு. கிறிஸ்துவின் ஒன்று விட்ட சகோதரராக மட்டுமல்லாது கிறிஸ்துவுக்கு யோர்தான் நதி நீரால் திருமுழுக்களித்து அவரை உலகுக்கு அறிமுகம் செய்த தவசியாகவும் புனித திருமுழுக்கருளப்பர் நற்செய்தியில் திகழ்கிறார். புனித திருமுழுக்கருளப்பர் கீழைத்தேய ஞானிகள் போல மான் தோலையுடுத்து தேனும் வெட்டுக்கிளியும் உண்டு பாலைவனத்தில் தவமியற்றி தவவாழ்வின் தேவையை வலியுறுத்துகின்றார்.

புனித லூக்காவின் நற்செய்தியில் திபியூரியஸ் அரசனின் 15வது ஆண்டில் அருளப்பர் தன் திருப்பணிகளைத் தொடங்கியதாக உள்ள குறிப்பின் அடிப்படையில் கிறிஸ்து பிறந்ததின் பின் 28வது 29 வது ஆண்டுகளில் அவரின் இந்தக் கடும் தவமுயற்சி இடம்பெற்றிருக்கலாமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சைவசமயத்து நீரால் புனிதப்படுத்தும் ஆன்மீகமுறையினை யூதர்களிடை அறிமுகம் செய்து அவர்களின் ஆண்மகவின் இரத்தத்தை அதன் ஆண்குறியின் மேற்தோலை அகற்றுவதன் மூலம் நிலத்தில் சிந்தவிட்டு அதன் வழி அக்குழந்தையை ஆன்மீகப் புனிதப்படுத்தும் இஸ்ரேலிய ஆன்மீகக்கலாச்சாரத்திற்கு மாற்றத்தைக் கொண்டு வருகிறார். இந்த மாற்றம் யூதத்தலைமைக்குருக்களின் அதிகாரத்திற்கு ஏற்படுத்திய அச்சுறுத்தல் இயேசு இவரின் கையால் திருமுழுக்குப் பெற்று இருவரது கருத்திலும் ஒற்றுமையுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று உணர்த்தியதால் யூதக்குருக்களின் தலைமைக்கு எதிரான மக்கள் எழுச்சியாகலாமென்ற அச்சத்தை யூதர்களுக்கு ஏற்படுத்தியது.



யோர்தான் நதியில் இயேசு திருமுழுக்குப் பெற்ற இடம்.

இதற்கிடை ஏரோது அரசன் தன்னுடைய சகோதரனின் மனைவியைத் தன்னுடைய மனைவியாக வைத்திருந்தமையை திருமுழுக்கருளப்பர் அரசனிடத்தில் நேரடியாகவே கண்டித்து வந்தார். இதனைப் பொறுக்காத ஏரோதன் திருமுழுக்கருளப்பரை சிறையில் அடைத்தான். ஆயினும் ஏரோதியாள் திருமுழுக்கருளப்பரை கொலை செய்ய விரும்பினாள். அரசனின் பிறந்தநாளில் அவளின் மகளை நடனமாடவைத்தாள். அரசன் நடனத்தில் மதிமயங்கிஅவள் எதைக் கேட்டாலும் கொடுப்பதாக வாக்களிக்க அவளோ தாயின் விருப்பின் பேரில் திருமுழுக்கருளப்பரின் தலையை தரும்படி கேட்டாள். இதனைக்கேட்டு அரசன் வருந்தினாலும் விருந்தினர் முன் தான் கொடுத்த வரத்தை நிறைவேற்றாது விட்டால் தன்னை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள் என்ற ஆணவ உணர்வில் திருமுழுக்கருளப்பரின் தலையை வெட்டும் படி அரசன் ஆணையிடுகிறான். இவ்வாறாக இயேசுவுக்கு முன்னரே திருமுழுக்கருளப்பர் மரணமடைந்தார். இதனைக் கேள்வியுற்ற இயேசு அங்கிருந்து புறப்பட்டு படகில் ஏறி பாலைநிலத்தில் உள்ள தனிமையான இடத்திற்குச் சென்றதாக நற்செய்தியாளர்கள் தெரிவிகின்றனர். இதனை அறிந்த மக்கள் பெருந்திரளாக இயேசுவைத் தேடி பாலைவனத்திற்குச் சென்ற பொழுதே மக்கள் களைப்புற்றிருப்பதைக் கண்டு இரண்டு மீன்களையும் ஐந்து அப்பங்களையும் 5000த்திற்கு மேற்பட்ட மக்களுக்கு உணவாக அளித்த அதிசயத்தை இயேசு செய்ததாக நற்செய்தி கூறுகிறது.



636 ம் ஆண்டளவில் டமாஸ்காஸ் முஸ்லீம்களால் கைப்பற்றப்பட்டதன் பின் 706க்கும் 715க்கம் இடையில் திருமுழுக்கருளப்பரின் வெட்டப்பட்ட தலை புதைக்கப்பட்டிருந்த ஆலயம் முஸ்லீம்களால் இடிக்கப்பட்டு அதன் மேல் உம்மயாத் பள்ளிவாசல் (**Umayyad Mosque** ) கட்டப்பட்டதாக கருதப்படுகிறது. இதனால் இன்று திருமுழுக்கருளப்பரின் தலையுள்ள இடம் இந்தப் பள்ளிவாசலுள் உள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் திருமுழுக்கருளப்பரின் பிறப்பு இயேசுவின் பிறப்பில் இறைவல்லமையின் நெறியாற்றலை உணர்த்துகிற பிறப்பாக அமைந்தது என்பது புனித லூக்கா எழுதிய நற்செய்தியின் பின்னணியில் தெரியவருகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன் எட்டாம் நூற்றண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த எசயுர் என்னும் இறைவாக்கினர் தென்நாடாகிய யூதா வலிமைமிக்க அண்டை நாடான அசீரியாவின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த நேரத்தில் யூதாவின் அவலநிலைக்கு அந்நாட்டு மக்கள் இறைவன் மேல் நம்பிக்கையிழந்தமையே காரணம் எனக் கூறி ஆன்மீக பலத்தினூடாக தேசவிடுதலை அடையப்படலாம் என்கிற செய்தியை மக்களுக்கு உரைத்த ஞானியாவார். இவர் கூறிய பல கருத்துக்களைப் பாடல்களை வசனங்களை புனித லூக்கா இயேசு மரியாள் ஆகியோர் பேசியதாக எழுதிச்சென்றுள்ளார். ஒன்றில் இயேசு மரியாள் தங்கள் மண்ணினதும் மக்களினதும் விடுதலையை முன்னெடுப்பவர்களாய் விடுதலைக் கருத்துக்களாக இருந்தவற்றை விடுதலைப்பாடல்களை மக்களிடை தம் வழியாக மீளவும் மண்ணினதும் மக்களினதும் விடுதலைக்கான அகச்சூழலைக் கட்டியெழுப்பினார்களா அல்லது புனித லூக்கா தனது மக்கள் விடுதலை நோக்கிய சிந்தனைகளை இயேசு மரியாள் பின்னணியில் வெளிப்படுத்தினாரா என்பது ஆராயப்பட வேண்டியவைகள். எது எப்படியிருப்பினும் மரியாள் எலிசபேத் உறவு என்பதும் திருமுழுக்கருளப்பர் இயேசுவை வெளிப்படுத்துவதும் இயேசு திருமுழுக்கருளப்பரை உறுதிப்படுத்துவதும் மண்ணினதும் மக்களினதும் விடுதலை நோக்கிய பயணத்தில் இருவரினதும் வரலாற்று ஒற்றுமைகளை உணர உதவுகிறது. இயேசுவின் விடுதலை என்பது மறு உலகிற்கு மக்களைத் தப்பியோட வைக்கும் தப்பியோடல் தந்திரோபாயம் அல்ல

*விண்ணகத்தில் உள்ள தந்தையே உம்முடைய அரசு வருக உம்முடைய எண்ணம் விண்ணகத்தில் செயற்படுத்தப்படுவது போல மண்ணகத்திலும் செயற்படுத்தப்படுவதாக* என்னும் இயேசு இவ்வுலகில் உண்மைக்குச் சாட்சி சொல்லும் பணியை இவ்வுலகில் இறையாணையை தடைசெய்கிற அனைத்தையும் எதிர்த்து நின்று இறையரசை இவ்வுலகில் நிறுவுவதற்கான முயற்சியையே ஆன்ம விடுதலையின் வழியாக காட்டுகிறார்.இதனால் இந்த நோக்கினை கொண்ட திருமுழுக்கருளப்பரும் இயேசுவும் ஆக்கிரமிப்பு சக்திகளால் கொன்றழிக்கப்படும் வரலாற்றைப் பார்க்கின்றோம். அவ்வகையில் எல்லா கிறிஸ்துவின் சீடர்களையும் விட நீண்ட கிறிஸ்தவ தாக்கத்தை தனது வாழ்வில் கொண்ட திருமுழுக்கருளப்பரின் தினமாக நீண்ட நேரத்திற்கு ஒளி இருக்கும் யூன் 21 ஐ அடுத்து வரும் யூன் 24 ஐ கத்தோலிக்கத் தலைமை தெரிந்து கொண்டமை பொருத்தமுடையதாகவே உள்ளது.

இனி யூன் 21ம் திகதியின் புவியியல் கலாச்சார முக்கியத்துவம் குறித்து எடுத்து நோக்குவோம். சூரியனை பூமி சுற்றி வரும் பொழுது கிடையாக இரு தடவையும் செங்குத்தாக இருதடவையுமாக நான்கு முறை செங்கோடுகளில் சூரியனை வலம் வருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய காலம் (Solar Term ) பூமியின் வடகோளப் பகுதிக்கான உச்சக் கோடைகாலம் எனலாம். யூன் மாதம் 21ம் நாள் தொடங்கி யூலை மாதம் 7ம் திகதி வரை இது நீடிக்கும். இதில் சூரிய தினமாக ("**solstice**") யூன் 21ம் திகதி அமைகிறது. "**solstice**" என்பது இலத்தீன் மொழியினுடாக பழங்கால பிரஞ்சு மொழியாகி பின்னர் நடுக்கால ஆங்கிலமாக மாறிய சொல். இதனுடைய பொருள் சூரியன் எழுந்து நிற்கிறான் என்பதாகும். பூமியின் தென்கோளப் பகுதிக்கு டிசம்பர் 21 அல்லது 22 சூரியத்தினமாக அமையும்.

வடகோளப்பகுதிக்கு கோடையின் நடுப்பகுதியில் ஆரம்பமாகும் இக்காலத்தை வடஐரோப்பிய மக்கள் பெருவிழாவாக கொண்டாடுவது மரபு. இயற்கை வழிபாட்டின் வழி சக்கரங்கள் அமைத்து பஞ்ச பூதங்களை வழிபடும் விக்கன் (Wiccan) மதத்தினர். வருடமொன்றை எட்டுச் சக்கரங்களாக வகுத்து விழாவெடுத்து வருகின்றனர். அவர்கள் கோடைச் சூரியத்தினத்தை லியத்தா என்னும் விழாவாகக் கொணடாடுகின்றனர்.



பிரித்தானியாவில் உள்ள வில்ட்செயாரில் உள்ள அமர்ஸ்பரியில் காணப்படும் ஸ்டோன் கென்ஞ் (Stonehenge) கற்றுாண்கள் புதிய கற்காலத்தில் அமைக்கப்பட்டன எனக் கருதப்படுகின்றன. இக்கற்றுாண்கள் அக்காலத்தில் சூரிய வழிபாட்டிற்குரியனவாக இருந்தன என்று நம்பப்படுகிறது. இக்கற்கள் ஊடாக சூரிய தினத்தன்று சூரியன் உதிப்பதைக் கண்டால் நோய்கள் துன்பங்கள் துயரங்கள் நீங்கும் என நம்பும் இயற்கைவழிபாட்டில் நம்பிக்கை உடைய மக்கள் இன்றும் யூன் 21ம் நாளில் இங்கு பெருந்திரளாக கூடுவது வழமையாக உள்ளது. இவர்களுடன் உல்லாசப் பயணிகளும் பெருமளவில் கலந்து மகிழும் விழாவாக இந்த யூன் 21ம் திகதிய சூரியன் எழுந்து நிற்கும் தினம் அமைகிறது.



கிழக்கில் சூரியன் ஏழு குதிரை பூட்டிய தேரில் வருவதாக மக்கள் நம்பியது போல மேற்கிலும் சூரியன் குறித்த பலவிதமான நம்பிக்கைகள் மரபு வழிபாடுகள் இருந்துவந்தன. அவற்றின் பின்னணிகளில் அமைந்த ஒரு வழிபாட்டு முறை தான் ஸ்டோன் கெஞ்சில் கற்களிடை சூரிய தினமான யூன் 21ல் சூரியனைத் தரிசிக்கும் மரபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவ்வாண்டு யூன் 21ல் ஸ்டொன்கென்ஜில் மக்கள் மகிழ்ந்து கொண்டாடிய காட்சிகள் சில



மேலும் ரஸ்யாவில் சூரியன் எழுந்து நிற்கும் தினம் போர்த்தன்மை கொண்ட (Rosiches) இன மக்களிடை ஆணும் பெண்ணும் மகிழ்ந்து நடனமாடும் தினமாக இருந்துள்ளது. இவர்கள் போருக்குச் செல்வதால் ஆண்களின் எண்ணிக்கை குறைந்த சமுதாயமாக மாறிய நிலையில் ஆணின் பல பெண்களுடனான உடல்உறவு இவர்களிடை ஊக்குவிக்கப்பட்டது. இதன் பின்னணயில் தான் இரவு மிக குறைவாக உள்ள சூரிய தினத்தன்று இரவு நடனம் ஆரம்பமாகியது. இதனை ரஸ்யர்கள் இவன் குப்பலாஸ் தின மாலை இரவு (The Night of Ivan-Kupala's Day-Eve) என அழைத்தனர் குப்பலா என்பது நிலத்தின் கருவளத்தை குறித்தது. சூரியன் மக்களுக்கும் மண்ணுக்கும் உற்பத்தி வளத்தை அளிப்பவன் என்கிற அடிப்படையில் இத்தினம் குப்பலா நடனத்தினமாகியது. தன் மகளைத் தவிர்ந்த அனைத்துப் பெண்களுடனும் நடனமாடும் உரிமை ஆணுக்கு இத்தினத்தில் அளிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. இந்த சூரிய தின கொண்டாட்டம் ரஸ்யாவின் ஊடாக ஸ்கண்டிவேர்னியன் நாடுகளுக்குப் பரவியது. பின்னர் சூரிய தின நடனங்கள் கொண்டாட்டங்கள் பாலியல் பிறழ்ச்சிகள் சமுதாயத்தில் இடம்பெற வழிகாட்டியதால்தான் கிறிஸ்தவ சமுதாயம் ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற தத்துவத்தை வலியுறுத்திய திருமுழுக்கருளப்பரின் தினத்தை இத்தினத்துடன் இணைத்து மக்களின் ஒழுக்கத்தை ஒழுங்குபடுத்தினர் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது .இதன்வழி டென்மார்க் நோர்வே ஆகிய நகரங்களின் மரபுப்படி இத்தினம் புனித திருமுழுக்கருளப்பர் தினமாகவே பின்னர் கருதப்பட்டு வந்துள்ளது. இவர்கள் வாணவேடிக்கைகள் நிகழ்த்தப்படும் தினமாக இன்றைய தினத்தைக் கொண்டாடினரெனத் தெரியவருகிறது.

## உலகில் எந்த நாட்டுக் காட்சி ?



யப்பானில் தான். நம்பமுடியவில்லையா?
நடைபாதையில் வீடற்ற மனிதன் உறங்குகிறான்
தெருவீதியில் உணர்வின்றி அவனைக் கவனிப்பாரின்றி
மக்கள் நடந்து செல்லும் காட்சி. பௌத்த பூமியில்
முதலாளித்துவத்தின் மாட்சி. யப்பானில் 25 வீதமான
மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைபேசியை அழுத்தி உயிரைக்காத்தமைக்காக விருது



தொலைபேசியில் 9ம் இலக்கத்தை தனது முன்னங்காலால் அழுத்தி அம்புலனஸ் பிரிவினரை அழைத்து நீரிழிவு நோயினால் தாக்கமடைந்து மயக்கமடைந்து உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த தன் சொந்தக்காரரை கெவின் வீவரைக் காத்த அமெரிக்க நாய் ஒன்றுக்கு நல்ல சமாரித்தன் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டு உள்ளது. ஒரு மிருகம் முதற்தடவையாக நல்லசமாரித்தன் விருதினைப் பெற்ற வரலாறும் இதன் மூலம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த நாய்க்கு நீரிழிவு தாக்கம் ஏற்படும் பொழுது அதனை நக்கி முகர்ந்து இனங்காண்பதற்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. அம்புலனஸ் சேவையில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு திடீரென அழைப்பு வந்தது. ஆனால் மறுபக்கத்தில் பதில் எதுவும் இல்லாமல் நாய் குரைக்கும் சப்தம் மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. உடனே அவர்கள் அந்த இலக்கத்துக்குரிய வீட்டுக்கு விரைந்த பொழுது நாய் தன்னுடைய முன்னங்காலால் தொலைபேசியின் 9ம் இலக்கத்தை அழுத்திய படி குரைத்த வண்ணம் இருப்பதைக் கண்டனர். அந்த தொலைபேசி 9 ஐ அழுத்தினால் தானாகவே 999 க்கு அழைப்பு ஏற்படுத்தும் வகையில் செய்யப்பட்ட தொலைபேசியாகும். ஆம்புலனஸ் பிரிவினர் உடனடியாக கெவினுக்கு சிகிச்சை அளித்து அவரின் உயிர் பாதுகாக்கப்பட்டது. பெலி என்னும் எனது நாய் என்னுடன் இருந்திராவிட்டால் நான் இறந்திருப்பேன். பெலி நாய் அல்ல என் உயிரைக் காத்த என் நண்பன் என கெவின் உணர்ச்சி ததும்பக் கூறியுள்ளார்.

## ஒற்றைத் தலைக்குத்து (Migraine) தொடங்கும் பொழுதே தடுக்கப் புதிய மின்னியல் நாடி உதவுகிறது



ஒற்றைத் தலைக்குத்தை (Migraine) தொடங்கும் பொழுதே தடுக்கக் கூடியவகையில் குறுகிய மின்காந்த அலைகளை வெளிப்படுத்தும் மின்னியல் நாடி அமெரிக்காவில் வெற்றிகரமாக 23 நோயாளிகளில் பரிசோதிக்கப்பட்டுள்ளது. தலைக்குத்து தொடங்கும் முன் நட்சத்திரங்கள் ஒளிக்கீற்றுகள் மின்னுவது போன்ற உணர்வுகள் - பார்வை குறைவடைதல் - தலைச்சுற்று போன்ற அறிகுறி அடையாளங்கள் தோன்றியவுடனேயே டி எம் எஸ் எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இக்கருவியை கொண்டு ஒருவர் மின்காந்த அலைகளை குறுகிய நேரத்துக்கு ஏற்படுத்தி தலைக்குத்துக்கு அந்நிலை முன்னேறிச் செல்லாதவாறு தடுக்கலாம். இதனை வரவேற்றுள்ள பிரித்தானிய வைத்தியர்கள். இப்பரிசோதனை இன்னும் அதிகம் பேரில் பரீட்சித்துப் பார்க்கப்படல் வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடி முழங்கும் பொழுது வெளியில் கைத்தொலைபேசியில் பேசுவதை இடைநிறுத்துவது நல்லது







இடிமுழங்கும் பொழுது திறந்த வெளியில் கைத்தொலைபேசியில் பேசுவதை நிறுத்துவது நல்லதெனப் பிரித்தானிய வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இலண்டனில் பெரிய பூங்காவொன்றில் இடிமுழங்குகையில் கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்த 15வயதுப் பெண் ஒருவர் இடிமின்னலால் தாக்கப்பட்டு இருதய அடைப்பு ஏற்பட்டு பின்னர் சிகிச்சையளிக்கப்பட்டு உயிர் பிழைத்தாலும் ஒருவருடமாக தள்ளுவண்டியில் வாழும் அவலநிலை தொடர்வதுடன் மூளைப்பாதிப்புகளும் அவர் கைத்தொலைபேசியை வைத்திருந்த காதுச் சவ்வு வெடித்து செவிப்புலன் இழப்பும் ஏற்பட்டுள்ளது. சீனா கொரியா மலேசியா ஆகிய நாடுகளிலும் மூவர் இடிமின்னல் நேரத்தில் கைத்தொலைபேசியில் பேசி மின்னலால் தாக்குண்டு உயிரிழந்துள்ளனர். உலகில் எந்த ஒருகணத்திலும் சராசரியாக 1800 இடிமுழக்கங்கள் ஏற்படுவதாகவும் ஒவ்வொரு செக்கனும் 100 மின்னல்கள் தோன்றுவதாகவும் அவதானிகள் கணித்துள்ளனர். ஒரு மின்னல் கீற்று 14000 மைல் மணி வேகத்தில் பயணிக்கும் சக்தி படைத்ததாகவும் ஒருசில செக்கன்களில் 30000 வோல்ட் மின்அழுத்தத்தை ஏற்படுத்தி காற்றை 30000 சென்ரி கிரேட் வெப்ப உயர்வு அடைய வைக்கக் கூடியதாகவும் உள்ளது. இது சூரியப்புயல் மேற்பரப்பில் உள்ள வெப்பத்தை விட ஐந்து மடங்கு அதிகம். ஆயினும் மின்னலால் தாக்கப்படுவதற்குரிய சந்தர்ப்பம் 3மில்லியனுக்கு ஒன்று என்ற விகிதத்திலேயே உண்டு. இருப்பினும் உலோகத் துண்டுகள் உடலுடன் இருப்பது மின்னலின் மின்சக்தி உடலுக்குள்ளால் தரையிறங்கும் அபாயத்தை விளைவிக்கும். இடிமுழங்குகையில் திறந்த வெளியில் கைத்தொலைபேசியில் பேசுவது மட்டுமல்ல சட்டைப் பையில் கைத்தொலைபேசியை வைத்திருப்பதும் ஆபத்தானது என வானிலை அவதான நிலைய விஞ்ஞானி போல் டெயிலர் கூறியுள்ளார்.






உலகக் கிண்ண ஜேர்மன் காட்சிகள்



உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தைக் கண்டு களிக்கவென வந்த இரசிகர்களுக்காக விசேடமாக அமைக்கப்பட்ட விமான இறங்குதுறையைத் தொழிலாளி ஒருவர் துப்பரவு செய்த பொழுது புகைப்படக் கலைஞர் அதனை புகைப்படமாக்கி விட்டார்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை யொட்டி ஜேர்மனியின் பேர்லினில் அமைக்கப்பட்ட புத்தக அடுக்கு நினைவுச் சிற்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிரித்தானியாவில் கருச்சிதைவு செய்வதற்கான காலத்தை மேலும் குறைக்குமாறு கருதினால் வேண்டுகோள்



கருதினால் மூர்பி ஓகோனர்

பிரித்தானியாவில் 1967ம் ஆண்டு கருச்சிதைவுச் சட்டத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென 31 பாராளமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் கத்தோலிக்க கருதினால் மூர்பி ஓகோனர் கருச்சிதைவுக் காலத்தை 24 வாரத்தினை விட குறைப்பதற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். கத்தோலிக்க மதம் கருச்சிதைவுக்கு எதிரான கடும்போக்கை கடைப்பிடிக்கின்ற போதிலும் நடைமுறைக் காரணைங்களுக்காக கருதினால் கருச்சிதைவு செய்யப்படும் காலம் குறைக்கப்படல் வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. நவீன மருத்துவ வளர்ச்சிகள் 24 வாரத்திற்கு குறைவான கருக்கட்டல் காலத்தைக் கொண்ட சிசுக்கள் கூட குழந்தைகளாகப் பிறப்புறுவதை உறுதி செய்த நிலையிலேயே கருச்சிதைவுக்கான கருக்கட்டல் காலத்தைக் குறைக்க வேண்டுமென்னும் கோரிக்கையை கருதினால் வலியுறுத்தியுள்ளார்.' 1989ல் பிரித்தானிய வைத்தியர்கள் அமர்வில் கருச்சிதைவு செய்வதற்கான காலத்தைக் குறைக்க வேண்டுமென வாதிடப்பட்ட போதும் வைத்தியர்கள் காலத்தைக் குறைப்பதற்கு எதிராகவே வாக்களித்தனர்.


**ABORTIONS BY LENGTH OF GESTATION PERIOD**




2004 figures for England and Wales

SOURCE: Office for National Statistics

**ABORTIONS BY AGE GROUP**




2004 figures for England and Wales

SOURCE: Office for National Statistics

பிரித்தானியாவில் 2004ம் ஆண்டுப் புள்ளிவிபரப்படி 9 கிழமைக்கு குறைவான காலத்தில் கருச்சிதைவு செய்யும் வீதம் 46புள்ளி 2 ஆக காணப்பட்டுள்ளது. அதே வேளை 2004ல் 20 முதல் 25 வயதினர் முதலாவது இடத்திலும் 25 முதல் 29 வயதினர் இரண்டாவது இடத்திலும் 16 முதல் 19 வயதினர் மூன்றாவது இடத்திலும் கருச்சிதைவு செய்துள்ளனர். 2004ல் பிரித்தானியாவில் 185000 கருச்சிதைவுகள் நடாத்தப்பட்ட போதும் 124 கருச்சிதைவுகளே 24வது வாரத்தில் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. பிரான்ஜ் இத்தாலி யேர்மன் ஆகிய நாடுகள் 12 கிழமைகளையும் 13 கிழமைகளையும் கருச்சிதைவுக்கான கால எல்லையாக கொண்டுள்ளது. பிரித்தானியாவில் 1 புள்ளி 6 வீதமானவர்களே 2004ல் 20 கிழமைகளுக்கு மேற்பட்ட காலத்தில் கருச்சிதைவு செய்துள்ளார்கள் எனவும் அவர்களும் போதிய நல்ல காரணங்களுடனேயே அதனைச் செய்துள்ளதாகவும் கருச்சிதைவுக் காலத்தைக் குறைப்பதற்கு எதிரான குடும்பக்கட்டுப்பாட்டுச் சங்கம் அறிவித்துள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை கருச்சிதைவுக் காலத்தை அரசின் கொள்கையாக கருதாது தனிப்பட்ட பாராளமன்ற உறுப்பினர்களின் விருப்ப வாக்குக்குரியதாக கருதுவதாக பிரதமரின் 10 டவுணிங்தெரு அலுவலகக் கருத்துக்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் தற்பொழுது கருச்சிதைவுக்காலத்தைக் குறைப்பதற்கான எண்ணம் பிரித்தானிய அரசாங்கத்திற்கு இல்லை என்றே பேசப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மனில் இடம்பெற்ற சமகாலம் மாத இதழின் பயிற்சிப்பட்டறைகள் மே 2006









சமகாலம் மாத இதழின் அரையாண்டுப் பூர்த்தியை யொட்டி வாசகர்களின் கருத்துக்களை கேட்டறியும் நோக்கில் சமகாலம் ஆசிரியர்கள் பற்றிமாகரன் திருமதி றீற்றா பற்றிமாகரன் ஆகியோர் யேர்மன் சென்று வாசகர்களைச் சந்தித்தனர். யேர்மனியில் சமகாலம் மாத இதழின் முகவராக எந்த வருமானமும் எதிர்பாராது உதவி வரும் திரு கோகிலன் திருமதி சந்திரா கோகிலன் ஆகியோர் வாசகர் சந்திப்பை பயிற்சிப்பட்டறைகளாக நடாத்தும்படி கேட்டதற்கு அமைய சந்திப்புக்கள் பயிற்சிப்பட்டறைகளாக மாற்றப்பட்டன.

முதலாவது பயிற்சிப்பட்டறையான படைப்பாற்றல் இலக்கியங்கள் பத்திரிகையாளர் பயிற்சி என்பன ஜேர்மன் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் பட்டறையுடன் இணைந்து நடைபெறுவதற்கு திருமதி சந்திரா கோகிலன் ஒழுங்கு செய்திருந்தார். ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினர் சார்பில் ஏலையா சஞ்சிகை ஆசிரியர் முருகதாஸ் அவர்கள் சமகால ஆசிரியர்களை வரவேற்று உரைநிகழ்த்தியதன் பின்னர் திருமதி சந்திரா கோகிலன் பட்டறையை அறிமுகம் செய்து வைக்க திரு திருமதி பற்றிமாகரன் இணைந்து பட்டறையை நடாத்தினர். ஜேர்மன் சர்வதேச தமிழ் ஒன்றியத்தினர் பலரும் சமுகமளித்திருந்த இந்நிகழ்வில் பல இளையவர்கள் கலந்து கொண்டு சிறப்பான முறையில் கவிதைகள் எழுதியும் பதில்கள் அளித்தும் பலத்த பாராட்டுதல்களைப் பெற்றனர். இரண்டாவது பட்டறையான சிறுவர்களும் பெண்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் நொய்சில் இடம்பெற்றது. இதில் திரு திருமதி சாந்தி வவுணியன் சபேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இங்கும் இளையவர்கள் பிரமிக்கத்தக்க வகையில் தங்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தி பாராட்டுதல்களைப் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனையாவது வயதில் மனிதன் அதிவேகமாகப் புதிய சொற்களைக் கற்கிறான்?



- பபில்கத்தை ஊதி உதடுகளை நக்கும் சிறுவர்கள் இலகுவில் மொழியினைப் பேசப்பழகுகிறார்கள்
- கைச் சைகை செய்தல் குழந்தையின் மொழி வளர்ச்சிக்கு உதவுகிறது

லங்காஸ்டர் பல்கலைகழகத்தினர் 120 பிள்ளைகளிடை நடாத்திய ஆய்வில் பபில்கத்தை ஊதி உதடுகளை நக்கும் குழந்தைகள் இலகுவில் மொழியினைப் பேசப் பழகிக்கொள்கின்றார்கள் என்ற உண்மை கண்டறியப்பட்டு உள்ளது. உதட்டை பலகோணங்களில் அசைக்கப் பழகுவதற்கும் மொழியாற்றலுக்கும் இடை தொடர்பு உண்டென இவ்வாய்வு தெரிவித்துள்ளது. ஒரு பொருளை அல்லது செயலைத் தமது செய்கை மூலம் வேறு ஒரு பொருளாகப் போலியாக காட்டி (உதாரணமாக ஓர் மரக்குற்றியை கார் எனக் குழந்தைக்கு காண்பித்தல்) கதைகளைக் கூறி வளர்க்கும் குழந்தைகள் மற்றைய குழந்தைகளை விட மொழியில் வளர்ச்சி பெறுவதாகவும் இவ்வாய்வுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் 21 மாதத்திலேயே குழந்தைகள் அதிகவேகமாக அதிக அளவான புதுச்சொற்களை அறிந்து கொள்கிறார்கள் எனவும் மற்றைய எல்லா வயதுகளையும் விட 21வது மாதத்திலேயே மனித வாழ்வில் மனிதன் அதிகம் புதிய சொற்களை அதிக வேகமாக கற்கிறானென இவ்வாய்வில் அறியப்பட்டுள்ளது. அத்துடன் சில பிள்ளைகள் கதைக்கத் தொடங்குவதற்கு காலம் தாழ்த்துகிறார்கள் எனவும் இவ்வாறு காலம் தாழ்ந்து கதைப்பதினால் அவர்களுக்கு மொழியாற்றல் குறைவாக உள்ளதென யாரும் கருதக்கூடாதெனவும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இவ்வாய்வில் லங்காஸ்டர் பல்கலைகழக உளவியல் விரிவுரையாளர் கலாநிதி கத்டை அல்கொக் ஒரு குழந்தை எவ்வாறு தனது மொழிவளத்தைப் பெருக்கிக் கொள்கிறது என்பதைக் கண்டறிவதற்குப் பலவிதமான பரிசோதனைகளைச் செய்தார். கைகளை அசைத்தல் அல்லது கையால் வடிவங்களை உருவாக்கிக் காட்டுதல் போன்றன குழந்தையின் மொழி ஆற்றலை வளர்க்கிறதெனவும் ஆயினும் குழந்தையை நடக்க வைத்தல் ஓடப்பழக்குதல் போன்றவை மொழி ஆற்றல் வளர்ச்சி அடைவதில் எத்தகைய பங்கினையும் வகிக்கவில்லை எனவும் இவர் கண்டறிந்துள்ளார். பொதுவாக இரண்டு வயதை அடையும் வரை ஒரு குழந்தை நக்குவதற்கும் முழுமையான முத்தம் கொடுப்பதற்கும் சிரமப்படும். இந்த ஆற்றல்களை குழந்தை விரைவாகப் பழகாது விட்டால் பின்னர் மொழியினைப் பேசுவதற்கு சத்தங்களை உச்சரிப்பதில் வெளிப்படுத்துவதில் சிரமங்களை அனுபவிக்குமென வைத்தியக் கலாநிதி கத்டை அல்கொக் மேலும் தெரிவித்துள்ளார். எனவே பெற்றோர் பிள்ளைகளை அணைத்துத் தூக்கி முத்தமிட்டு அதிகம் பிள்ளைகளுடன் கதைத்து பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதற்கு முன்னரே அவர்களின் உதட்டசைவு போதிய அளவில் வளர்ச்சி பெற உதவவேண்டுமென இவர் ஆலோசனை வழங்கியுள்ளார். நியூகாசில் பல்கலைகழக பேச்சு மற்றும் மொழி குறித்த உடலியல் வைத்தியர் பேராசிரியர் ஸ்டெப்னி ஸ்டோக்ஸ் 14 முதல் 18 மாதங்களில் கைச்சைகைகள் மூலம் குழந்தையுடன் தொடர்பு கொள்வது 28வது மாதத்தில் மற்றைய குழந்தைகளை விட இத்தகைய குழந்தைகள் அதிக மொழித்திறமையுள்ளவராக இருக்க உதவுகிறதெனத் தெரிவித்துள்ளார். அத்துடன் இப்புதிய ஆய்வு ஒரு குழந்தையின் மொழியாற்றல் எவ்வாறு வளர்ச்சி அடைகிறதெனக் கண்டறிய உதவமென நம்பிக்கை தெரிவித்துள்ளார். வைத்தியர் அல்கொக் அடுத்து தன்னுடைய கண்டு பிடிப்பு 3 வயது 4 வயது 5 வயது குழந்தைகளில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறதென ஆய்வுசெய்யவுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தையின் ஆய்வறிவை வளர்க்க
உங்களுக்குத் தமிழ் மொழியில் உதவும் மாத இதழ்



# சமகாலம்

## சமுக விஞ்ஞான அறிவியல் மாத இதழ்


முதன்மை ஆசிரியர் Chief Editor :

**S. J. Fatimaharan** MA in Politics of Democracy, BSc (Information Systems and Politics) , BA(Tamil ,Political Science , Economic) Special Dip in Social Studies (Oxford) Dip in Housing

இணை ஆசிரியர் Co Editor :

**Rita** Post Graduate Diploma in Housing Post Graduate Diploma in Social Policy BSc (Education &Information Society) BA (Tamil , Economic and Geography)

For Contact : 0044 1865 437 397 e-mail : rfatimaharan @ yahoo.co.uk

39 Napier Road Oxford OX4 3HZ United Kingdom


---



## சம காலத்திற்கு உங்கள் சந்தாவை அனுப்பி விட்டீர்களா

கடந்த காலத்தை அறிந்து கொள்ளவும். - சமகாலத்தை விளங்கிக்கொள்ளவும் - எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளவும் உதவும் என்னும் நோக்கில் தமிழில் வெளிவரத் தொடங்கிய இம்மாத வெளியீட்டுக்கு உங்கள் வருடாந்தச் சந்தாவாகிய 18 பவுண்ஸ்களை (தபால் செலவு உட்பட) அனுப்பி விட்டீர்களா? இல்லையேல் உடன் அனுப்பி உதவுங்கள். நீங்கள் சந்ததாரராக இருப்பின் தயவுசெய்து மற்றவர்களிடம் இந்நூல் பற்றி எடுத்துச் சொல்லி சந்தாதாரர் பெருக உதவுங்கள். விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன. நிதி ஆதரவுகளும் நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும். முகவர்களுக்கும் விளம்பரங்கள் பெற்றுத்தருபவர்களுக்கும் கமிஷன் வழங்கப்படும்.

<u>சந்தாப் படிவம்</u>

பெயர் :...................................... தொலை பேசி இலக்கம் :......................

முகவரி :...........................................................................................

ஒரு வருடச் சந்தா 18 பவுண்ஸ் (12 இதழ்களுக்கு) க்கு உரிய காசோலை இத்துடன் இணைத்துள்ளேன். ( காசோலையை **<u>Sama Kaalam</u>** என்ற பெயருக்கு எழுதுங்கள்)

கையொப்பம் :.................................. திகதி : ........................

அனுப்ப வேண்டிய முகவரி :
Samma Kaalam, 39 Napier Road, Oxford, OX4 3HZ, United Kingdom
உங்கள் நிதி ஆதரவு இதழின் வளர்ச்சிக்கு நீங்கள் அளிக்கும் மலர்ச்செண்டு. நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கிண்ண உதைபந்தாட்டம் 2006

## தேசிய உணர்வினை தட்டி எழுப்பியதால் தேசக் கொடிகளின் நிறத்தில் மக்கள் கொண்ட கோலங்கள்



உள்ளங்கி முதல் வெளியுடைகள் வரை உதைபந்தாட்ட இரசிகர்கள் உதைபந்தாட்டத்தின் தன்மைகளைத் தம்மில் வெளிப்படுத்துவதை தமது நோக்காக கொண்டிருந்தனர். சிகையலங்காரங்களிலும் தலைகளில் அணியும் தொப்பிகளிலும் காதணிகளிலும் கைப்பைகளிலும் தேசவர்ணங்கள் படர்ந்தன. உடல் எல்லாம் தேச வர்ணம் தீட்டிவித்து மகிழ்ந்தவர்கள் சில ஆயிரம்.








தேசக் கொடிகளின் வர்ணங்களில் ஊதுகுழல்கள் கூட அமைக்கப்படுமளவுக்கு தேசிய உணர்வு மேலோங்கி நின்றது. குழந்தைகள் கூட தேச அணி நிறக் காற்றடைப்பு மெத்தையில் உட்காரவைக்கப்படும் அளவுக்கு தேசிய உணர்வில் மக்கள் திளைத்தனர்.










இவ்வாறு உதைபந்தாட்டம் என்றதுமே எதிலும் தேசிய வேகம் கொண்டு மக்கள் காணப்படும் இன்றைய நிலை தேசிய உணர்வுகள் மறக்கப்பட்டு எல்லாத் தேசியங்களும் ஒற்றையாட்சிக்குள் உயர்வு காணலாம் என்று மூன்றாம் உலக நாடுகளுக்கு உபதேசம் செய்யும் முதலாம் உலக நாடுகளின் பொய்மைத்தனத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. தேசியங்களின் தனித்துவங்கள் சமமாக மதிக்கப்படும் உலகே அமைதியான உலகாக இருக்க முடியுமென்பதற்கு உதைபந்தாட்ட தேசிய உணர்வுகள் சான்றாக அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டப் போட்டி வளர்ந்து வந்த வரலாறு - சுருக்கமான பார்வை



உலக வெற்றிக்கிண்ணப் போட்டி 2006 நடைபெற்று கொண்டிருந்த நேரத்தில் பிரித்தானியாவின் மொரிஸ் நிறுவனம் நடாத்திய கருத்துக் கணிப்புப்படி மக்கள் உதைபந்தாட்டத்தை விட வரலாற்றில் அதிக ஆர்வம் காட்டுவது தெரியவந்துள்ளது. கருத்துக் கணிப்பின் படி 73 வீதமான மக்கள் வரலாற்றிலும் 59 வீதமான மக்கள் பொது விளையாட்டுக்களிலும் 48 வீதமான மக்கள் உதைபந்தாட்டத்திலும் தாம் விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். ( ஆதாரம் மேவ் கென்னடி கார்டியன் 03.07.2006) இதனைப் படித்த பொழுது உதைபந்தாட்டத்தின் வரலாற்றை நாம் சுருக்கமாக எடுத்து நோக்குவது நமது வாசகர்களுக்கு அறிவையும் சுவையும் அளிக்குமென நம்பி இந்தக் கட்டுரை இவ்விதழின் சிறப்புக் கட்டுரையாக வரையப்படுகிறது.

உதைபந்தாட்டத்தின் தொன்மைத் தாயகம் சீனா என்று கருதப்படுகிறது. கி மு 3 ம் நூற்றாண்டளவில் சீனாவில் டு உ சூ ( Ts'uh chu) என்னும் பெயருடைய உதைபந்தாட்டம் நடைபெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் இறகுகள் அடைக்கப்பட்ட தோல் பந்து மூங்கில் கோல் போஸ்ட்டுக்களுக்குள் அடிக்கப்பட்டது.
இது கால இட மாறுதல்களுடன் கொரியாவிற்கும் பரவி பின்னர் கி பி 100 ம் ஆண்டளவில் யப்பானில் கீமாரி (Kemari) என்னும் பெயரில் பந்தாட்டம் இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கீமாரி வட்டவடிவ மைதானத்தில் நடைபெற்றதெனவும் பந்தை நிலத்தில் விழவிடாமல் காற்றில் வைத்திருத்தலே விளையாட்டின் இலக்காக கொண்டு விளையாடப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

கி மு 50 முதல் கி பி 500 க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் றோமர்கள் ஹபர்ஸ்டும் (Harppastum) என்னும் பெயரில் உதைபந்தாட்டத்தை விளையாடினர் எனவும் இவ்விளையாட்டு மைதானம் செவ்வகவடிவில் அமைக்கப்பட்டு போட்டிக் குழுக்கள் எதிர் எதிரே நின்று பந்தை மற்றவரின் எல்லைக் கோட்டைத் தாண்டி கையாலோ அல்லது காலாலோ கொண்டு செல்வது வெற்றிக்குரிய இலக்காக அமைக்கப்பட்டு விளையாடப்பட்டது.

சங்க காலத்து தமிழ் இலக்கியங்களில் தமிழ்ப் பெண்கள் நீர்ப்பந்து மலர்ப்பந்து விளையாடிய குறிப்புகள் இருப்பினும் இவை குறித்த முறைமையான ஆய்வுகள் தேவையாக உள்ளது.

மேலும் 1200 களில் இங்கிலாந்தில் பன்றியின் சிறுநீர்ப்பையினை பந்தாக கொண்டு விளையாடப்படுகிற விளையாட்டு இருந்து வந்ததாகவும் விளையாட்டு மைதானமாக ஒவ்வொரு கிராம எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டு ஒரு கிராம எல்லையைத் தாண்டி மற்றைய கிராம எல்லைக்குள் பன்றியின் சிறுநீரகப்பந்தை கையாலோ காலாலோ அடித்துக் கொண்டு செல்லுதல் வெற்றிக்கான இலக்காக கொள்ளப்பட்டது.

1500களில் இத்தாலியில் 27 பேரைக் கொண்ட குழுக்கள் சதுர மைதானத்தி-ல் விளையாடும் கல்சியோ (Calcio) என்னும் விளையாட்டு இடம்பெற்றுள்ளது. 1846ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேம்பிரிஜ் பல்கலைகழக மாணவர்களால் உதைபந்தாட்ட ஒழுங்கு முறை எழுதப்பட்டது. அதில்தான் முதன் முதலில் கையால் பந்தை எடுத்துச் செல்வது தடைசெய்யப்பட்டது. தொடர்ந்து 1863ல் ஆங்கிலேயர் உதைபந்தாட்டச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு நவீன உதைபந்தாட்டத்திற்கான பிள்ளையார் சுழி போடப்பட்டது. 1866ல் தான் முதன் முதலில் கோர்னர்ஸ் அடிப்பதும் பிறி கிக்ஸ் அடிப்பதும் தொடக்கி வைக்கப்பட்டது. 1870ல் முதன் முதலில் உதைபந்தாட்டச் சங்கத்தால் ஒரு குழுவில் விளையாடுபவர்களின் எண்ணிக்கை 11 ஆக வரையறுக்கப்பட்டது. 1871ல் கோல் காப்பாளரைத் தவிர மற்றைய விளையாட்டு வீரர்கள் கையால் பந்தைத் தொடுவது தடைசெய்யப்பட்டது. 1871ம் ஆண்டின் வரலாற்றுச் சிறப்பு மிகு நிகழ்வாக உலகின் முதல் உதைபந்தாட்டப் போட்டி நடாத்தப்பெற்றது.
1885ல் இங்கிலாந்தில் உதைபந்தாட்டம் சட்டபூர்வமாக்கப்பட்டு அதனைத் தங்கள் தொழிலாகக் கொண்டு விளையாடுபவர்களுக்கு ஊதியம் வழங்குதல் தொடக்கி வைக்கப்பட்டது. 1889ல் போட்டி மத்தியத்தர்களுக்கு தீர்மானம் எடுக்கும் முழுஅளவிலான அதிகாரம் வழங்கப்பட்டு அவர்களுக்கு உதவியாக இரு லைன்ஸ் மென்னை ஒழுங்கு செய்தல் தொடக்கி வைக்கப்பட்டது. 1904ல் அனைத்துலக உதைபந்தாட்ட ஒன்றியம் பாரிஸ் மாநகரில் தொடங்கப்பெற்றது. 1930ல் உலகின் முதலாவது உலக கிண்ணப் போட்டி அனைத்துலக உதைபந்தாட்ட ஒன்றியத்தால் உருகுவேயில் நடாத்தப்பெற்றது. 1945ல் இரண்டாவது உலகயுத்தத்தை அடுத்து யேர்மனி உலக உதைபந்தாட்டச் சங்கத்திலிருந்து விலத்தப்பட்டு 1950ல் மீளவும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1954ல் ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. 1970ல் மஞ்சள் சிவப்பு அட்டைகள் காண்பிக்கும் முறைமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. 1990களில் இங்கிலாந்து கிளப்புகள் ஐரோப்பிய ஒன்றிய போட்டிகளில் மீளவும் இணைந்து கொண்டன.





யூல்ஸ் ரெமிட் கிண்ணம் 1974ல் உலக கிண்ணமாகியது

1930முதல் உலக உதைபந்தாட்டப்போட்டிக்கு வழங்கப் பெற்று வந்த வெள்ளிக்கிண்ணத்தின் பெயர் 1946முதல் யூல்ஸ் ரெமிட் (**Jules Rimet**) வெற்றிக்கிண்ணம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. யூல்ஸ் ரெமிட்டால்தான் 1930ல் உலக உதைபந்தாட்டப் போட்டி தொடக்கி வைக்கப்பட்டது. இவர் 1921 முதல் 1954வரை உலக உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவராக இருந்தவர். ஆயினும் 1970 முதல் இன்று வழங்கப்படும் உலக வெற்றிக்கிண்ணம் வழங்கப்படத் தொடங்கியது. இதனை இத்தாலியைச் சேர்ந்த சில்வியோ கசானிக்கா (Silvio Gazzaniga) வரைபமைக்க பெட்டொனி மில்லானோ (Bertoni, Milano) வடிவமைத்தார். 36புள்ளி 5 சென்ரி மீற்றர் உயரமான 5கிலோ கிராம் நிறையுடைய இந்த விருது 18 கரட் தங்கத்தால் செய்யப்பட்டு அடியில் மலாச்சைட் (malachite ) என்னும் பச்சைநிற செப்புத் தாதுப்பொருளினால் இருபடைகள் இடப்பெற்றுள்ளது. இருமனித உருவங்கள் உலகைத் தாங்குகின்ற பாணியில் இந்த விருது அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 1991ல் உலகின் முதலாவது பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டது. தொடர்ந்து 1996ல் கோல்டன் கோல் என்னும் முதல் 90 நிமிடங்கள் முடிந்ததின் பின் அடுத்து 30 நிமிடங்கள் கொடுக்கப்பட்டு அதற்குள் முதலாவது கோல் அடிக்கும் குழு வெற்றி பெற்றதாகக் கருதப்படும் வழமை தொடங்கப்பெற்றது. ஆயினும் 2006 உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் இம்முறை மாற்றப்பட்டு முழுமையான 15 15 நிமிடங்களாக 30 நிமிடங்கள் மேலதிகமாக கொடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RANJIT & CO SOLICITORS

**Empowered to Administer Oaths**

**N. Ranjithakumaran**
Solicitor

* Civil Litigation
* Criminal Litigation
* Asylum / Immigration
* Matrimonial Injunction
* Employment Law
* Conveyancing
* Traffic Matters
* Police Station Matters
* Welfare Matters
* Family Law
* Personal Injury
* Commercial Property
* Company Law
* Wills and Probate

**Tel: 020 8767 9717 (3 lines) | Fax: 020 8767 9684**
**Mobile: 07956 886 749 | 07802 485 958**

**E-mail: ranjit@joinnetuk.com**

182 MITCHAM ROAD
LONDON SW17 9NJ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Best Deals For Mortgages



## MORTGAGES
Up to 95% loan to value

High income multiples

Arrears / CCJ's Defaults

Council right to buy up to 85% market value.

Interest only or capital Repayment

## REMORTGAGES
Arrears / CCJ's / Defaults

Self certification of income

Poor credit rating.

Council properties in pre emption

Any purpose including debt consolidation

Bankruptcy/ IVA/Repossession plans High Income multiples No upper age limit

## COMMERCIAL
Purchase and Remortgages

Up to 80% loan to value

£50,000 - £2 million

No accounts required

Arrears / CCJ's / Defaults

Many types of security accepted inc. leisure, retail, industrial.



**Tel : 020 8591 8765 - Fax : 020 8591 9890 - Mob : 079 3017 5031**





## PROPERTY MAINTENANCE
*Loft Conservation
*New build ( House )
*New Roof
*Extensions
*Carpentry
*Central Heating
*Plumbing
*Bricks Works
*Electrical Wiring
*Flooring
*Double Glazing



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by JR Print Tel: 020 8503 6643